ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

02.09.2009 - மலர் 06, இதழ் 26



## வறிய மாணவர்களுக்கான மூங்கில் பாடசாலை

## சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஜன்னல்கள்

## இலங்கையின் துறைமுகங்கள்

## பூனைக் குடும்பத்தின் அங்கத்தவர்கள்

விலை ரூபா 15/-

**தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை**

பொதுசன நூலகம்

Rs.25.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒல்லாந்தரின் வருமானம்

கறுவா வர்த்தகத்தின் மூலமே ஒல்லாந்தர் அதிக வருமானத்தைப் பெற்றனர். அவர்கள் வருடமொன்றிற்கு அதிகம் செலவழிக்காமல் கறுவா வளரும் கிராமங்களில் வாழ்பவரை அணுகி 50,000 இறாத்தல் வரையிலான கறுவாவை சேகரித்தனர்.

இத்தகைய கிராமங்களுக்கு பொதுவாக 'மஹபத்த' எனும் பெயரைப் பயன்படுத்தினர். கறுவா வளரும் கிராமங்களில் உள்ளவர்கள் அங்கேயே நிரந்தர வதிவாளர்களாக இருப்பதால் ஜூலை மாதம் முதல் செப்டெம்பர் வரை கறுவாப் பட்டையை உரிக்கும்படி கட்டளையிடப்பட்டனர். வேலை செய்யக்கூடிய சக்தியுள்ள ஒவ்வொருவரும் 682 இறாத்தல் நிறையுள்ள கறுவாவை அல்லது அதற்கு அதிகமாக கொண்டு வந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு கொண்டு வரும் நபர் ஒருவருக்கு 600 இறாத்தல் கறுவாவுக்கு சிறியதொரு பணம் வழங்கப்படும். அது ஆறு 'லரின்ச' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கறுவா உரிப்பதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒல்லாந்தரால் அரிசி, உப்பு, மீன் போன்றவை வழங்கப்பட்டன. இதற்காக வர்த்தக சங்கத்திற்கு செலவானதோ சொற்ப தொகை மாத்திரமே. பெரும்பாலும் அவைகளும் இலவசமாகப் பெற்றவைகளே.

சிலாபம் முதல் அம்பாந்தோட்டை வரை கறுவாப் பயிர் இயல்பாகவே வளர்ந்தது. அதனால், ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு கறுவாவை பெற்றுக்கொள்வதில் அவ்வளவு சிரமம் இருக்கவில்லை. அப்பொழுது கறுவா வர்த்தகத்தின் ஏகபோக உரிமை ஒல்லாந்த வர்த்தக சங்கம் வசமே இருந்தது. அதனால், ஏனையோருக்கு கறுவா வர்த்தகம் செய்யத் தடைவிதிக்கப்பட்டது. ஒல்லாந்தருக்கு உரித்தில்லாத கற்பிட்டி போன்ற துறைகளில் இருந்து வெளியேறும் கப்பல்களையும் ஒல்லாந்தர் சோதனையிட்டனர்.

அன்று பாக்கு வர்த்தகமும் பெரும் லாபம் தரும் தொழிலாக இருந்தது. றைகம் மற்றும் பஸ்துன் கோரளைகளில் உள்ள 'மஹபத்த'வுக்கு உரித்தான இடங்களிலும் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களிலும் பெருமளவு பாக்குப் பயிர் வளர்ச்சி அடைந்திருந்தது.

Rs. 25.00
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தர ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கற்கைநெறி ஆரம்பம்

உயர் தர வகுப்புகளின் ஆசிரியர்களுக்கென குறுகியகால பயிற்சிக் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தீர்மானித்துள்ளார். இந்த குறுகிய கால கற்கைநெறியை பல்கலைக்கழகங்களில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் அறிவுத்திறனை நடைமுறைக்கேற்ப செயற்படுத்துவதே இந்த பயிற்சிக் கற்கைநெறியினை ஆரம்பிப்பதன் நோக்கமாக இருக்கின்றது. இதன் முதல்கட்டமாக விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான குறுகிய கால பயிற்சிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து கலை மற்றும் வணிக பாடங்களுக்கான பயிற்சிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படும். களனி, கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களில் இந்த கற்கைநெறி நடைபெறவுள்ளது.



## உலகின் மிகச் சிறிய நாய்

அண்மைய காலம்வரை 'உலகின் மிகச் சிறிய நாய்' என்ற சாதனையைத் தனதாக்கிக்கொண்டிருந்தது அமெரிக்காவில் இருக்கும் 'பூ பூ' (Boo Boo). இதன் உயரம் 4 அங்குலம்தான். ஆனால், தற்போது பூ பூ வின் சாதனையை உடைத் தெறிந்து, உலகின் மிகச் சிறிய நாய் என்ற சாதனையை 'ஸ்கூட்டர்' தனதாக்கிக் கொண்டுள்ளது.



பூ பூ


செரிலுடன் ஸ்கூட்டர்

நியூஸிலாந்தைச் சேர்ந்த செரில் மெக்நைட் என்ற பெண்மணியே ஸ்கூட்டர் எனும் இந்த மிகச் சிறிய நாயின் உரிமையாளராவார். பிறந்து ஆறு மாதங்களில் ஸ்கூட்டரின் வளர்ச்சி நின்றுவிட்டதாக அவர் கூறுகின்றார். அதன்படி, ஸ்கூட்டரின் உயரம் 3 அங்குலமாகவே இருக்கின்றது.

ஒரு தேநீர் கோப்பைக்குள் அமர்ந்துகொள்ளக்கூடிய அளவுக்கு ஸ்கூட்டரின் உடல் சிறியதாகும். பாதணிப் பெட்டியொன்றே இதன் ஓய்வெடுக்கும் இடமாகவும் தூங்கும் இடமாகவும் இருக்கின்றது. ஒரு முட்டையைத்தான் ஸ்கூட்டர் நாள் முழுவதும் சாப்பிட்டுக்கொண்டிருக்குமாம். உடல் முழுவதும் வெள்ளை நிற மயிர்களைக்கொண்டிருக்கும் ஸ்கூட்டர், பார்ப்பதற்கு பஞ்சினாலான வெண்பந்து போன்று தோற்றமளிக்கின்றது. சிலநேரம் அது ஓரிடத்தில் இருப்பதுகூடத் தெரிவதில்லை. அதற்காகவே ஊதா நிறத்திலான காலுறையினால் ஒரு காற்சட்டையைத் தைத்து இதற்கு அணிவித்திருக்கிறார் செரில்.

ஸ்கூட்டர் அளவில் மிகச்சிறியதாக இருப்பதால் வெளியே செல்லும் போது அதனை அழைத்துச் செல்வது சற்று சிரமமாக இருப்பதாக கூறும் செரில், ஒருகாலத்தில் தான் ஸ்கூட்டரை மிகவும் வெறுத்ததாகவும் ஆனால், அதுவே இன்று தான் மிகவும் விரும்பும் செல்லப் பிராணியாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

-ஜீநு

## தேவதாசன் ஜெயசிங் நினைவு மலருக்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

மலையகத்தின் பிரபல எழுத்தாளரும் கவிஞரும் முன்னாள் பாடசாலை அதிபருமான காலஞ்சென்ற கலாபூஷணம் தேவதாசன் ஜெயசிங் அவர்களின் நினைவு மலரொன்றை வெளியிட கண்டிக் கலைக்கழகமும் தேவதாசன் ஜெயசிங் மாணவர் ஒன்றியமும் உத்தேசித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மேற்படி நினைவு மலரில் தமது ஆக்கங்களும்



இடம்பெற விரும்புகின்ற மலையகத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் தமது கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகியனவற்றை அனுப்பி வைக்கலாம் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த ஆக்கங்கள் மலையக சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை முறை, சமூக மேம்பாட்டுக்கான வழிமுறைகள் ஆகிய தலைப்புகளின்கீழ் இடம்பெறல் வேண்டும். சிறந்த ஆக்கங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தமது ஆக்கங்களை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் **பொதுச் செயலாளர், கண்டிக் கலைக்கழகம், இல-190, கொழும்பு வீதி, கண்டி.** என்ற முகவரிக்கு 15/09/2009 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

Vijey විජය
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## தேர்தல் தொடர்பான சகல ஆவணங்களையும் சேகரித்தல்

**1930 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் நடைபெற்று வந்துள்ள பல்வேறு தேர்தல்களின்போதும் விநியோகிக்கப்பட்டுள்ள தேர்தல் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் உட்பட சகல ஆவணங்களும் தனிப்பட்ட அடிப்படையில் சேகரிக்கப்பட்டு தேசிய சுவடிகள் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளன.**

**1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிகள் சட்டத்தின் 13 (1) (2) ஆம் பிரிவின்படி, இலங்கையில் நடைபெறும் ஏதேனும் ஒரு தேர்தலின்போதும் குறித்த கட்சி மற்றும் சுயேட்சை வேட்பாளர்களினால் பிரகடனம் செய்யப்பட்ட தேர்தல் கொள்கைப் பிரகடனங்கள், அறிவித்தல்கள், படங்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட தேர்தல்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து வெளியீடுகளும் அவை பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு அல்லது கையளிப்பதற்கு வேட்பாளர்கள் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

**மேற்படி, சேகரிப்புக்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டுமன்றி, அவற்றைப் பிரகடனம் செய்துள்ள அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சை வேட்பாளர்களுக்கும் பல்வேறு காரணங்களுக்காக வேண்டி பிற்காலத்தில் உதவியாக அமைந்துள்ளதாக தேசிய சுவடிகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH CORSE
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி ∴ வீண் கட்டணங்கள் இல்லை
* குரகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ / மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
பாடநெறியில் இணையும் அணைவருக்கும
அழகிய பேக் ஒன்றும் Tigo Sim (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
இந்த DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0817 918 981 / 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் எங்கே செல்கின்றது?



ஜப்பானில் பட்டம் விடும் கண்காட்சி
ஓவியர் ஒருவரின் பார்வையில்

மனிதனால் ஆகாயத்திற்கு செலுத்தப்பட்ட முதல் தயாரிப்பு பட்டமாகும். சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்களும் பட்டம் பற்றி அறிந்திருந்தனர் எனக் கருதப்படுகின்றது. பட்டம் பறக்க விடுவதற்கு ஆடி மாதமே உரிய காலமாகத் திகழ்கின்றது. காற்றைப் பயன்படுத்தி பட்டத்தைப் பறக்கவிட்டு மகிழும் பிள்ளைகளை கிராமியப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் நாம் காணமுடியும். இவ்வாறான பட்டம் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

## யார் பட்டத்தை முதலில் தயாரித்தது?

சீனர்களே முதன்முதலில் பட்டத்தை தயாரித்து ஆகாயத்தில் பறக்கவிட்டுள்ளனர். கி.மு 500 இல் மரக்கட்டைகளால் தயாரிக்கப்பட்ட பறவை உருவத்தை உடைய பட்டம் ஒன்று சீனர்களினால் ஆகாயத்தில் பறக்கவிடப்பட்டது என்று கூறப்படுகின்றது. சீனாவில் இருந்தே குறுகிய காலகட்டத்தில் பட்டம் ஆசிய நாடுகளுக்குப் பரவி பிரபல்யம் பெற்றது. இந்தியர்கள் அதற்கு மத அடையாளம் ஒன்றைக் கொடுத்தனர். பின்னைய காலப்பகுதியில் மத்திய ஐரோப்பாவிலும் பட்டம் பிரசித்தி பெற்றது.

## பட்டத்தின் வகைகள்

பட்டத்தின் வடிவம் கூடு வடிவத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இந்தக் கூடு வடிவ அடிப்படையை மாற்றி வெவ்வேறு வடிவங்களில் பட்டங்களை அமைக்கமுடியும். இலங்கையில் கொம்பு, வெளவால், தவளை, மயில், மீன், பாம்பு ஆகிய வடிவங்களில் பட்டங்களைக் காணமுடியும்.

## தட்டையான பட்டம்


பட்டத்தின் பழைய வடிவம் இதுவாகும். ஈர்க்கினால் அல்லது மெல்லிய குச்சிகளினால் கூடு வடிவம் தயாரிக்கப்பட்டு அதன் மீது கடதாசி ஒட்டப்படுகின்றது.

## பெட்டிப் பட்டம்

சதுரம் மற்றும் முக்கோண வடிவில் பெட்டி அமைக்கப்பட்டு அதன் மீது கடதாசி ஒட்டப்படுகின்றது. காலநிலை தகவல்களைப் பெற இப்பட்டத்திற்குள் உபகரணங்கள் வைத்து அனுப்பப்படுகின்றன.

## டெல்ட்டா பட்டம்

டெல்ட்டா என்பது கிரேக்க அரிச்சுவடியில் நான்காவது எழுத்தாகும். இதன் சிறகுகள் டெல்ட்டா வடிவில் இருக்கும். இதன் பின்பகுதி வால் போன்று இருப்பதால், காற்றில் பறக்க இலகுவாக அமையும்.



## எரோபொயில் பட்டம்

இது துணியால் தயாரிக்கப்படும் பட்டமாகும். இதற்குள் காற்று நிறைந்ததும் அதன் வடிவம் தீர்மானிக்கப்படும். இதில் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அதற்குப் பல பெயர்கள் சூட்டப்படுகின்றன.

## காட்சிப் பட்டம்

இவை கண்காட்சிக்கெனத் தயாரிக்கப்படுகின்றன. இவை கூட்டாக அல்லது தனித்தனியாக ஆகாயத்தில் பறக்கவிடப்படுகின்றன. ஒரே வரிசையில் பல்வேறு வர்ணங்களில் பறக்க விடப்படுவதால் இது பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

முன்னைய காலங்களில் பட்டங்கள் பறக்க விடப்பட்டதால் பல நன்மைகளும் இருந்தன. சீனர்கள் தமது எதிரிப்படைகளின் நடமாட்டத்தை அறியவும், அவர்களை திசைதிருப்பவும் பட்டங்களை பறக்க விட்டுள்ளனர். அதேவேளை, 1752 இல் இடியும் மின்னலும் கொண்ட காலநிலையின்போது, மெல்லிய கம்பியில் பட்டத்தைப் பொருத்தி வானுக்கு ஏவிய விஞ்ஞானி பென்ஜமின் பிராங்க்ளின் இடி மின்னலினால் மின் அலைகள் உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொண்டார். இதன்படி, காலநிலை எதிர்வுகூறல்களைக் கண்டுபிடிக்கவும் பட்டங்கள் உதவின.

## பட்டம் மேலே பறக்கும் விதம்

காற்றின் வேகம் அதிகமாக இருக்கும்பொழுது பட்டம் விடுவது இலகுவாகும். பட்டத்தின் வடிவம் மற்றும் அதன் வெளிப்புற இயல்பு என்பன பட்டம் பறப்பதற்கு இலகுவாக உள்ளது. பட்டத்துடன் இணைக்கப்படும் நூல் அதன் சமநிலையைப் பேணுவதுடன் காற்றின் வேக அழுத்தம் காரணமாக பட்டம் மேலே பறக்கின்றது.


## தேவையான பொருட்கள்

ஈர்க்கு, நூல், நைலோன் நூல், மெல்லிய கடதாசி என்பன பட்டம் செய்ய அவசியமாகும். இறக்குமதி செய்யப்பட்ட பட்டங்களும் இங்கு விற்பனைக்கு உள்ளன.

## பட்டம் விடும் கண்காட்சி

ஆசிய நாடுகளில் பட்டம் விடும் கண்காட்சி மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது. இவ்வாறான கண்காட்சிகளில் பட்டம் விடும் போட்டிகளும் நடைபெறுகின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஜன்னல்கள்


அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், கெனடா உட்பட பல்வேறு நாடுகள் இணைந்து, சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன. பூமியில் இருந்து சுமார் 300 மைல் தொலைவில் மிதந்தபடி, சுற்றிக்கொண்டு இருக்கும் இந்த நிலையத்தில் பல்வேறு ஆய்வுப்பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்த நிலையத்துக்கு விண்வெளி வீரர்களையும் ஆய்வுக்கலன்கள் மற்றும் பிற பயனுள்ள பொருட்களையும் அனுப்பி வருகின்றன. தற்போது ஒரே நேரத்தில் 6 விண்வெளி வீரர்கள் இங்கு தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த விண்வெளி நிலையத்தில் ஒரு சிறிய கண்ணாடி ஜன்னல் மட்டுமே இருக்கின்றது. இது 20 அங்குல அளவில் வட்டவடிவமாக இருக்கும். அவ்வளவு விசாலமான விண்வெளி நிலையத்தில் ஏன் ஒரே ஒரு ஜன்னல்? என நீங்கள் கேட்கலாம். ஆனால், விண்வெளி நிலையத்தில் உள்ள அந்த ஜன்னல் சிறியதாக இருப்பதற்கு காரணமும் உள்ளது. அதாவது, விண்வெளியில் கதிர்வீச்சு ஆபத்து நிறையவே உண்டு. இதுதவிர, விண்வெளியில் தாறுமாறாக சுற்றிக்கொண்டிருக்கும் எரிகற்கள் அல்லது விண்வெளிக் குப்பைகள் மோதிக்கொள்ளும் ஆபத்தும் அங்கு





இருக்கிறது. எனவேதான் மிகச்சிறிய கண்ணாடி ஜன்னல் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கண்ணாடி எளிதில் உடையாத தன்மை கொண்டது. எந்த கதிர்வீச்சையும் தாங்கும் சக்தி கொண்டது. இதுதவிர, இந்த ஜன்னலை சுற்றி சக்தி வாய்ந்த இரும்பினாலான பாதுகாப்புக் கவசமும் உண்டு.

இந்த நிலையில், சற்றுப் பெரிய ஜன்னல் கொண்ட புதிய ஆய்வுப் பகுதியை சர்வதேச விண்வெளி நிலையத் துடன் இணைக்கத் திட்டமிட்டுள்ளனர். 'ட்ரான்குய்லிடி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த புதிய ஆய்வுப்பகுதி இத்தாலியில் தயாரிக்கப் பட்டதாகும். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமளவில் இந்த ஆய்வுப்பகுதி விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. பின்னர் இதை சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைப்பார்கள். இந்த புதிய ஆய்வுப்பகுதியில் 30 அங்குலத்தில் கண்ணாடி ஜன்னல் அமைத்துள்ளனர். இதன்மூலம் பூமி மற்றும் பிற நட்சத்திரங்களை சற்றுத் தெளிவாகவும் பெரிதாகவும் பார்க்கலாம்.




# விண்வெளிக்குச் செல்லும் உளவு விமானம்





அபிவிருத்தி அடைந்த நாடுகளும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் தங்களது பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துகின்றன. குறிப்பாக, வல்லரசு நாடுகள் அணு ஆயுத தாக்குதலில் இருந்து தங்களது நாட்டைப் பாதுகாக்க நவீன கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்த ஆர்வம் காட்டுகின்றன.

அந்தவகையில், அமெரிக்க விமானப்படை இதற்கான முதல் திட்டத்தில் இறங்கியுள்ளது. அதன்படி, விமானி இல்லாமல் இயங்கும் ஒரு தானியங்கி உளவு விமானத்தை தயாரித்துள்ளது. இதுதான் அந்நாட்டின் விண்வெளி பாதுகாப்பு வீரனாக செயல்பட இருக்கின்றது. இதற்கு 'X37B' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த விமானம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாஸா' மற்றும் விமானத் தயாரிப்பு நிறுவனமான 'போயிங்' ஆகியவை இணைந்து இந்த ஆள் இல்லாத விமானத்தைத் தயாரித்துள்ளன. தொடர்ந்து 3 வாரங்கள் வரை விண்வெளியில் பறக்கும் திறன்கொண்ட தாக இருக்கும் இந்த விமானத்தில் சக்தி வாய்ந்த கெமரா, ரேடார் கருவிகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட் டுள்ளன. இவற்றினூடாக இந்த விமானம் ஒரு நாட்டின் வான் எல்லையை பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்யும் என்பதோடு, எதிரி நாட்டின் எல்லைப் பகுதியையும் உளவு பார்க்கும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

# விண்வெளியில் ஹோட்டல்

விஞ்ஞானத்தின் மிக வேகமான வளர்ச்சி காரணமாக அடுத்த தலைமுறை யினர் இனிவரும் காலங்களில் சுற்றுலா செல்வதாயின்; சந்திரன், செவ்வாய் போன்ற உப கோள்கள் உட்பட ஏனைய கோள்களுக்குத்தான் செல்வார்கள் என்று கூறினால் அதில் தவறில்லை. ஏனெனில், அதற்கான வசதிகளும் ஏற்பாடுகளும் தற்போது செய்யப்பட்டுள்ளன. தற்போது சுமார் 100 கோடி ரூபாய் கொடுத்தால் விண்வெளிக்கு சுற்றுலா செல்லமுடியும். அமெரிக்கா மற்றும் ரஷ்யா அனுப்பும் விண்கலத்தில் பயணம் செய்து, விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் விண்வெளி நிலையத்துக்கும் சென்று தங்கி வரலாம்.





இவ்வாறு விண்வெளிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் விண்வெளியில் ஒரு ஹோட்டல் நிர்மாணிக் கப்பட இருக்கின்றது. லண்டனைச் சேர்ந்த இம்பீரியல் கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரியில் இன்னோவேஷன் டிசைன் இன்ஜினியரிங் (புதுமை வடிவமைப்பு பொறியியல்) முதுகலை பட்டப்படிப்பு கற்கும் மாணவர்கள் இதற்கான முயற்சியில் இறங்கி உள்ளனர். இவர்களுக்கு நாஸா மற்றும் ஐரோப்பிய விண்வெளி மையத்தில் பணியாற்றிய விஞ்ஞானி டேனியல் பெட்டினி வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறார்.

இந்த விண்வெளி ஹோட்டலுக்கான ஒரு பகுதி திட்டங்களை மாணவர்கள் முடித்துவிட்டனர். அறைகள் மற்றும் ஹோட்டலின் முழு வடிவத்தையும் கணினி உதவியுடன் வடிவமைத்து இருக்கிறார்கள். மேலும், இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கான பல சிறப்பு வசதிகளையும் மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். விண்வெளி ஈர்ப்பு விசையும் புவியில் உள்ள ஈர்ப்பு விசையும் ஒன்றுபோல் இருக்காது. எனவே, இந்த விண்வெளி ஹோட்டலில் பூமியில் இருப்பது போன்று தங்கும் அளவுக்கு புவியீர்ப்பு வசதி தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

இவை தவிர, சுற்றுலாப் பயணி களுக்கென சிறப்பு உடையும் தயாரிக் கப்பட்டு இருக்கிறது. இதுகுறித்து ஆய்வில் ஈடுபடும் மாணவி கெத்ரின் போம்கார்டின் கூறும்போது, "சுற்றுலாப் பயணிகளுக்கான சிறப்பு உடையையும் தயாரித்து இருக்கிறோம். அங்கு சலவை இயந்திரத்தைப் பயன்படுத்தி துணி துவைக்க முடியாது. அதற்குப் பதிலாக நமது தோலினூடாக வெளியிடப்படும் சுவாசம் மற்றும் வியர்வையைப் பயன்படுத்தி, தானாக சுத்தம் செய்து அழுக்கை போக்கிக் கொள்ளும் வகையிலான உடை வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, அழுக்கு மற்றும் கறையைப் பற்றி கவலை கொள்ளத்தேவையில்லை" என்றார்.




# கடல் அலையும் காந்த சக்தியும்

பூமியைச் சுற்றிலும் காந்த சக்தி இருப்பதை நாம் அறிவோம். இதற்குக் காரணம், பூமிக்குள் புதைந்து இருக்கும் தனிமங்கள் என்று முன்னர் கருதப்பட்டது. அதன்படி, பூமியின் மேற்பரப்பிலும் பூமிக்குள்ளும் இரும்பு உட்பட ஏராளமான உலோகங்கள் உள்ளன. இதன் காரணமாகவே பூமியின் மேற்பரப்பில் காந்தப்புலம் ஏற்படுகிறது என்று கூறப்பட்டது. அதாவது, பூமியின் மையப்பகுதியில் சுமார் 1500 மைல் சுற்றளவில் வெள்ளை நிறத்தில் கொதிக்கும் இரும்பு திரவ வடிவில் உள்ளது. இதைச்சுற்றி சுமார் 1400 மைல் அளவில் பிற உலோக பரப்பு இருக்கிறது. இதன் காரணமாகவே பூமியைச் சுற்றி காந்தப்புலம் உருவாகிறது என்றும் கூறப்பட்டது.

ஆனால், இப்போது இது பற்றி புதிய கருத்து ஒன்று வெளியாகி இருக்கின்றது. அமெரிக்காவின் இல்லினோய்ஸ் நகரிலுள்ள நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத் தின் ரசாயன மற்றும் உயிரியல் தொழில்நுட்ப ஆய்வாளர் கிரிகோரி ரிஸ்கின் இது குறித்து தெரிவித்திருப்பதாவது: "கடலுக்குள் செல்லும் கடல் நீரோட்டம் மற்றும் கடல் அலைகள் காரணமாகவே பூமியில் காந்தப்புலம் ஏற்படுகின்றது. உப்புத்தன்மை மிக்க கடல் நீரில் உள்ள உப்பு மின்னோட்டம் பெறுகிறது. இதன் காரணமாக மின்சாரம் மற்றும் காந்தப்புலம் ஏற்படுகிறது. அதாவது, கடல் நீரோட்டம் வேகமாக செல்லும்போதும், கடல் அலை உருவாகும் போதும் ஏற்படும் ஆற்றல் காரண மாக இந்த உப்புநீர் மின்னோட்டம் பெறுகின்றது. இந்த செயல் தொடர்ந்து நடைபெறும்போது பூமியைச் சுற்றி காந்தப்புலம் ஏற்படுகின்றது என்று அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்கால மனிதன் வாழ்வில்



விவசாயம் மனிதனின் முக்கியமானதொரு கடமையாகும். ஆதி மனிதன் கற்குகைகளில் வாழ்ந்து வேட்டையாடி உணவுத் தேவையை நிறைவு செய்து கொள்ளும் பழக்கத்தில் இருந்து விடுபட்ட காலம் முதல் சுமார் 10,000 வருடங்களாக மனிதன் விவசாயம் செய்து வருகிறான். ஆதி மனிதனின் வாழ்வில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றமானது அவன் நிலத்தை உழுது பண்படுத்தி பயிரிடக் கற்றுக்கொண்டமை என்னும் உண்மை உணரப்பட்டுள்ளது.

நிலத்தை பண்படுத்தி உழுது பயிரிட்டு நீர் பாய்ச்சி அறுவடை செய்யக் கற்றுக்கொண்டதன் மூலம் மனிதன் எதிர்நோக்கிய முக்கிய தேவையும் சவாலுமான உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. மந்தை மேய்ப்பு பிரதான தொழிலாக இருந்த வேளையில் மேய்ப்புக்காக மந்தைகளை ஓட்டிச்செல்கையில் சலசலவென்று பாயும் நீர் நிலைகள் ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு செல்லும்போது செழிப்பான நிலங்களை மனிதன் கண்டான். மந்தைகளை மேய்த்து அவற்றுக்கு நீர் புகட்டிய பின்னர் அங்கு தாங்கிச்செல்லவும் சந்தர்ப்பம் கிட்டியது. இக்காலப் பகுதியில் நாடோடியாக வாழ்ந்த மனிதன் விவசாய யுகத்திற்குள் பிரவேசிக்கும் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் ஏற்பட்டன.

## சமூக நிறுவன கட்டமைப்பு

இவ்வாறு மனிதன் விவசாய யுகத்திற்குள் பிரவேசித்ததையடுத்து அவனது வாழ்க்கையில் புதுயுகம் மலர்ந்தது. குடும்பக் கட்டமைப்பும் அதன் ஊடாக சமூகக் கட்டமைப்பும் உருவாகின. இதனால், தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, குழுக்கள், சமூகம் என்ற அமைப்புக்கள் உருவாக வழி பிறந்தது. இந்த சமூகத்திற்குள் உற்பத்தி மற்றும் தொழில் முயற்சி என்ற அடிப்படையில் விரிவு ஏற்பட்டது. இதன்போது மனிதனுக்கு குடியிருப்புத்தேவை ஏற்பட்டதால் வீடுகட்டி அழகாகவும் ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் வாழும் தேவை உணரப்பட்டது. வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் மனிதன் ஒன்றுகூடி கலந்துரையாடவும் சந்தித்துக்கொள்ளவும் என மண்டபங்களையும் நிர்மாணித்தான். இப்படியே தேவைகள் விரிவடைந்து கொண்டு சென்றன.

## நகர நிர்மாணம்

விவசாய உற்பத்தி மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்ட மனிதனுக்கு உற்பத்திப் பொருட்களையும் ஆறுவடைத் தானியங்களையும் பரிமாறிக் கொள்ளும் அல்லது விற்பனை செய்யும் இடம் தேவைப்பட்டது. ஆரம்பகாலத்தில் பண்டமாற்று வியாபார முறை நிகழ்ந்தாலும் அதற்கான ஒரு மத்திய நிலையம் அவசியம் என்ற தேவை உணரப்பட்டது.

அதற்காக குறிப்பிட்ட இடத்தில் மக்கள் ஒன்று சேர்ந்தனர். அங்கு உற்பத்திப் பொருட்களை கொண்டு வந்து பரிமாறிக்கொண்டனர். அந்த இடங்களில் சனப்பரம்பல் உருவாகியது. அந்த இடங்களே நகரங்களாக மாறின.உலகில் இவ்வாறு உருவாகிய மிகவும் பழைமை வாய்ந்த நகரம் துருக்கியில் கண்டுபிடிக்கப்பட்டது. 8000வருடங்களுக்கு முன்னர் அந்நகரத்தைச் சூழ சுமார் 5000 மக்கள் வாழ்ந்ததாக சான்றுகள் கூறுகின்றன.அந்த நகரம் 26 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தாக கருதப்படுகிறது.

## அரசன்

இவ்வாறு நகரம் உருவாகி வர்த்தக நடவடிக்கை நிகழ்ந்தபோது, மக்களிடையே முரண்பாடுகள் ஏற்படாதவாறு அமைதி பேணவும் மக்களை வழி நடத்தவும் தலைவர் ஒருவரின் தேவை உணரப்பட்டது. அந்தத் தலைவர் காலம் செல்லச் செல்ல வழிபடக்கூடியவராகவும் மன்னராகவும் மாற்றமடைந்தார். மக்கள் அவருக்கு கட்டுப்படலாயினர். அவரே அப்பகுதியின் ஆட்சியாளராக வளர்ச்சியடைந்தார்.

இதன் காரணமாக மனிதன் நாடோடி என்ற நிலையில் இருந்து ஒருபடி முன்னேற்றமான தங்கி வாழும் நிலைக்கு உயர்வடைந்தான். இதன்படி, 10,000 வருடங்களுக்கு முன்னர் மனிதன் விவசாயத்தில் ஈடுபட்டு பயிரிடல் நடவடிக்கையை ஆரம்பித்ததாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

இவ்வாறான விவசாய நிலங்கள் மொசப்பத்தேமியா, அனடோலியா, வட சிரியா, ஜோர்தான், வடசீனா, இந்து நதிக்கரை, நைல் நதிக்கரை, தென் ஆசியா, வட மற்றும் தென் அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் பல்வேறு விதமான தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தென்னாசியாவில் பார்லி, சீட் ஆகிய தானிய வகைகளும் சீனாவில் நெல் மற்றும் மிலட் என்ற தானியமும் பயிரிடப்பட்டிருக்கின்றன.

## தொழில்நுட்ப வளர்ச்சி

விவசாயம் காரணமாக பண்டைய சமூகவாழ்வில் பல்வேறு கலையம்சங்களும் வளர்ச்சியடையலாயிற்று. கத்தி, கோடாரி, அரிவாள், கட்டாரி, உளி மற்றும் கூரான ஆயுதங்களின் உற்பத்தியும் இக்காலப்பகுதியில் ஆரம்பமாகின.விவசாயத்தை மேம்படுத்த உதவிய ஆயுதங்களாக இவை கருதப்பட்டன.

எகிப்து, சீனா போன்ற நாடுகளில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மனிதன் மட்பாண்டங்களை செய்வதற்கும் கற்றுக்கொண்டிருந்தான்.



## விவசாயத்துறை

விவசாய யுகத்தின் பிரதான அம்சங்கள் இரண்டாகும். கால்நடை வளர்ப்பும் பயிர்ச்செய்கையுமே அந்த அம்சங்களாகும்.


## உலோக உற்பத்திகள்

மானிட வாழ்வில் முக்கிய திருப்புமுனையாக அமைவது மொசப்பத்தேமிய பிரதேசத்தில் வாழ்ந்த மனிதன் செம்பு, இரும்பு போன்ற உலோகங்களைக் கண்டுபிடித்தமையாகும். அதனால், அப்பிரதேசத்தில் உலோக கைத்தொழில் முறையாக வளர்ச்சி கண்டது. அங்கிருந்து அண்மித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம் ஏற்படுத்திய புரட்சி


உபகரண தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிலர்...

பிரதேசங்களுக்கும் இந்த உலோகக் கைத் தொழில் படிப்படியாக பரவலாயிற்று. வளர்ச்சி கண்ட முறையில் உலோகத்தைப் பயன்படுத்தி உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கு மனிதன் கற்றுக்கொண்டான்.

## மட்பாண்டம்

அழகிய வடிவங்களில் மட்பாண்டங்களை தயாரிப்பதற்கு மனிதன் கற்றுக்கொண்டான். அத்துடன், அவை அலங்கார வடிவங்களையுடையனவாக வடிவமைக்கப்பட்டன. இங்கு வெறும் மட்பாண்டங்களாக அன்றி அழகிய கைவண்ணக்கலை வெளிப்பாடும் காணப்பட்டது.

## மட்பாண்ட தயாரிப்பு உபகரணம்

மட்பாண்டம் தயாரிக்கப் பயன்படும் உபகரணமான உருளை அல்லது சுழலும் சக்கரம் கி.மு 6500ஆம் ஆண்டளவில் கண்டறியப்பட்டதாகும். இந்த உபகரணம் மூலம் மண் மெல்லியதாக்கப்பட்டு அழகாக வடிவமைக்கக்கூடியதாயிற்று. உலக வரலாற்றின் ஒரு திருப்புமுனையாக இந்த உபகரணம் கருதப்படுகின்றது.

இந்த உபகரணத்துடன் சக்கரம் செய்யும் கலை வளர்ச்சியடைந்தது. அதன் காரணமாக பொருட்களை இடத்திற்கிடம் கொண்டு செல்லும் வாகனத்தை தயாரிக்கவும் மனிதன் கற்றுக் கொண்டதால் பணி இன்னும் இலகுவாகியதோடு வாணிபம் வளர்ச்சியடையவும் வழி பிறந்தது. உலோக உற்பத்திகள் வளர்ச்சியடைந்ததால் நிலத்திற்கடியில் இருந்து நீரை மேலே கொண்டு வர நீர் இறைக்கும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டது.

## மானிட வாழ்வின் வளர்ச்சி

இக்காலப்பகுதியில் தாம் வாழ்ந்த சூழலை நிர்வகிப்பதற்கும் மனிதன் கற்றுக்கொண்டான். இது அப்போதைய முக்கிய தேவையாக இருந்தது. காலநிலை மாற்றத்தால் திடீர் என உணவுப் பொருட்கள் அழிவுறும் நிலை ஏற்படாமல் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்துகொண்டான். ஆரம்பகாலத்தில் வேட்டையாடி வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் உணவை உற்பத்தி செய்யவும் சேமிக்கவும் கற்றுக்கொண்டதோடு, செழிப்பான நிலத்தில் சிறப்பான முறையில் உழுது பண்படுத்தி விவசாயம் செய்யும் தொழிலில் அடிப்படையாக வளர்ச்சி கண்டான்.

ஆயுத தயாரிப்பிற்கு பயன்படுத்திய அச்சுவடிவம்





விதவிதமான ஆயுதங்களும் மட்பாண்டங்களும்



இவ்வாறாக குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, நிறுவன அமைப்பு என்ற அடிப்படையில் மானிட வளர்ச்சி முன்னேற்றம் கண்டமைக்கு விவசாயம் முக்கிய காரணமாக அமைந்தது.

## மத நம்பிக்கை

இவ்வாறு வாழ்ந்த மனிதர்களிடையில் மத வழிபாடும் முக்கிய அம்சமாக இருந்தது. சிலை வணக்கம் பிரதான வழிபாட்டு முறையாக இருந்தது. ஆண், பெண் தொடர்பு வாழ்வின் அதிர்ஷ்டமாக கருதப்பட்டது. அதன் அடிப்படையில் ஒழுக்கமான சிறந்த குடும்ப வாழ்க்கை ஏற்படவும் வழிவகுத்தது. குழந்தை வளர்ப்புக்கும் முக்கிய இடமளிக்கப்பட்டது. இதன் காரணமாக எனது குடும்பம் எனது குழந்தை என்ற உணர்வு ஆண்களிடம் ஏற்பட்டது.

அத்துடன், மிருகங்களைப் பழக்கி தமது வாழ்க்கைத் தேவைகளை ஈடு செய்யவும் கற்றுக்கொண்டனர். குழந்தைகளையும் தமது தொழிலுக்குப் பழக்கி முறையாக விவசாயத்தை முன்னெடுத்தனர். பிற்காலத்தில் தமது நிலம் தமது தொழில் என்ற உணர்வுடன் இன்றைய காலம் வரையான முன்னேற்றங்களுக்கும் இந்த விவசாயம் முக்கிய காரணமாக அமைந்தது எனலாம்.



## ஆயுத உற்பத்தி

மானிட வாழ்வில் ஏற்பட்ட பாரிய மாற்றம் காரணமாக மனிதனின் பல்வேறு தேவைகளும் விரிவடைந்தன. உபகரணங்கள், ஆயுதங்களின் தேவையும் ஏற்பட்டது. அதற்காக தகரம் மற்றும் செம்பு ஆகிய உலோகங்களைப் பயன்படுத்தினர். இந்த உலோகங்களை பழுக்கக் காய்ச்சி உருக்கி விதம் விதமான ஆயுதங்களையும் உபகரணங்களுக்குரிய பாகங்களையும் தயாரிப்பதில் மனிதன் வெற்றி கண்டான்.

இன்றைய யுகத்தில் நாம் பயன்படுத்தும் முன்னேற்றகரமான ஆயுதங்கள் உபகரணங்களுக்கு முன்னோடியாக அமைந்தவை அன்றைய மனிதனின் அறிவும் முயற்சியுமாகும்.

## கடல் கடந்த பிரயாணம்

'நியாந்தர்தால்' மற்றும் 'குரோமக்னன்' என்றழைக்கப்பட்ட மானிட வர்க்கம் வாழ்ந்த ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க பிரதேசங்களுக்கு அப்பாலும் மனிதன் நகர்ந்ததால் விவசாய மாற்றங்கள் வியாபிக்க ஆரம்பமாயிற்று. அதனால், மனிதன் எப்பிரதேசத்துக்கு நகர்ந்து சென்றானோ அங்கெல்லாம் அவனின் குடிபெயர்ச்சியும் விவசாயமும் அறிமுகமாயின. இதன்போது கடல் கடந்து செல்ல வேண்டியேற்பட்டபோது மிதக்கும் ஓடங்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் அவன் ஈடுபட்டான். அதன் காரணமாக ஓடங்கள் பாய்மரப்படகுகளாகவும் சிறிய கப்பல்களாகவும் நவீன கப்பல்களாகவும் உருவாக வழிபிறந்தது.

இதனையடுத்தே நாடுவிட்டு நாடு சென்று குடியேறும் குடிப்பரம்பல் ஆரம்பமாயிற்று. அவ்வாறு மனிதன் சென்ற இடங்களில் எல்லாம் அவனோடு அவன் கற்றிருந்த விவசாய அறிவும் ஏனைய கலைகளும் திறமைகளும் பரவலாயிற்று. நாடுகாண் பயணங்களுக்கும் தேச நிர்மாணங்களுக்கும் ஆட்சியியல் நிர்வாக சிந்தனையிலான மாற்றங்களுக்கும் விவசாயமே முக்கிய காரணமாகியது.

**எம்.எஸ். அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் உள்ள துறைமுகங்கள் சில....

**உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளுக்கிடையில் பொருளாதாரத் தொடர்புகளை நிலைநிறுத்தும் பிரதான சேவைக் கட்டமைப்பு துறைமுகங்களையே சார்ந்திருக்கின்றது. இதன்மூலம் பொருளீட்டும் நாடுகள் சிலவற்றின் நாலாபுறங்களும் கடலால் சூழப்பட்டிருக்கும். அவ்வாறான நாடுகளில் இலங்கை பிரதான இடத்தை வகிக்கின்றது.**

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் துறைமுக அதிகாரசபை கடந்த மாதம் முப்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. சரித்திர காலந்தொட்டு கிழக்கையும் மேற்கையும் தொடர்புபடுத்தும் கேந்திர இடமாக இலங்கைத் துறைமுகங்கள் காணப்படுகின்றன.

## துறைமுக வரலாறு

பண்டைய சிங்கள அரசர்களின் காலத்தில் யாபாபடுன (யாழ்ப்பாணம்), மஹாதின்ன, கோகன்ன ஆகிய துறைமுகங்கள் இலங்கையில் இருந்துள்ளன. சிங்கள அரசர்களின் இறுதி ஆட்சிக் காலத்தில் காலி, கொழும்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் புதிதாகத் துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. காலப்போக்கில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் போன்ற அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் புதிய துறைமுகங்களுக்கு முக்கியத்துவம் அளித்ததால், பழைய துறைமுகங்களுக்கான மதிப்பு அற்றுப்போனது. எனினும், யாழ்ப்பாணத்தில் மட்டும் காங்கேசன்துறை துறைமுகம் ஓரளவுக்கு இயங்கி வருகின்றது.

## துறைமுகங்களின் மீளமைப்பு

புதிய துறைமுகங்களை அந்நிய ஆட்சியாளர்கள் ஓரளவுக்கு அபிவிருத்தி செய்திருந்தபோதும் முறைப்படியான அபிவிருத்தி 1875 இல் பிரித்தானியராலேயே மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் 1875 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்கு இறங்குதுறையைக் கட்டிப் பதிவுப் புத்தகங்களையும் வைத்தார்கள். 1882 இல் கொழும்புத் துறைமுகத்தைக் கேந்திரமாக வைத்து, 'ஹாபர் போர்ட்' எனும் பெயரில் துறைமுக சபையையும் நிர்வாகத்துக்காக அமைத்தார்கள். அதன் அதிகாரத்தின் கீழேயே கொழும்பு, காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் நிர்வகிக்கப்பட்டு வந்தன. 1913 இல் 'ஹாபர் கொமிஷன் போர்ட்' என்றும் 1958 இல் 'வராய சங்யுக்த மண்டலய' என்றும் அதன் பெயர் மாற்றப்பட்டது. பின்னர் 1979 இல் துறைமுக அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டது.

## இலங்கையிலுள்ள பிரதான துறைமுகங்கள் சில...

1. கொழும்புத் துறைமுகம்.
2. காங்கேசன்துறை துறைமுகம்.
3. திருகோணமலை துறைமுகம்.
4. காலி துறைமுகம்.

## புதிய செயற்றிட்டங்கள்

1977 இல் உருவான திறந்த பொருளாதாரக் கொள்கையினால், 1980 முதல் 2000 வரை துறைமுக சேவை கூடுதல் பொருளீட்டலை அண்மித்தது. இதனால், அபிவிருத்தியைக் கூட்டுவதற்காக துறைமுக அதிகாரசபை மேலும் மூன்று பிரதான விடயங்களில் கவனம் செலுத்தியது. அவையாவன;

1) தற்போதிருக்கும் துறைமுகங்களுக்குப் புதிய இயந்திர செயற்பாடுகளை இணைத்தல்.

2) கொழும்புத் துறைமுகத்தை நவீனமயப்படுத்தல்.



கொழும்புத் துறைமுகம்



திருகோணமலை (இயற்கை) துறைமுகம்



காங்கேசன்துறை துறைமுகம்



ஒலுவில் துறைமுக நிர்மாணம்



காலி துறைமுகம்



ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம்

3) புதிய துறைமுகங்களைக் கட்டுதல் என்பவாகும்.

## துறைமுக நிர்மாணிப்பும் நவீன மயப்படுத்தலும்

துறைமுக அதிகாரசபையின் ஒரு சாதனையாகவே நெடுங்காலமாக திட்டமிடப்பட்டிருந்த ஹம்பாந்தோட்டை துறைமுகம் கட்டும்பணி முடிவுறும் தருவாயில் இருக்கின்றது. அத்தோடு, ஒலுவில் துறைமுக வேலையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதேவேளை, தற்போது காலி துறைமுகமும் மேலும் அபிவிருத்தி செய்யப்படுவதோடு, கொழும்புத் துறைமுகத்திலும் பல்வேறு நவீன மயப்படுத்தும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

## கொழும்புத் துறைமுகம்

2009 ஆம் ஆண்டு மார்ச் 04 ஆம் திகதியிலேயே கொழும்புத் துறைமுகத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பமானது. அதற்கான மதிப்பீட்டு செலவுத்தொகை 345 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 5,140 மீற்றர் அளவுள்ள பிரதான இறங்குதுறையும் 1,090 மீற்றர் அளவுள்ள இரண்டாவது இறங்குதுறையும் எண்ணெய்க்குழாயும் ஏனைய கப்பல் சேவைகளும் முதற்கட்டத்திலேயே பூர்த்தி செய்யப்படும். இத்திட்டம் 2012 ஆம் ஆண்டளவில் செயல்வடிவில் பூர்த்தியாகுமானால், ஆசியாவிலுள்ள தலைசிறந்த துறைமுகங்களில் கொழும்புத் துறைமுகமும் ஒன்றாகிவிடும்.

## ஹம்பாந்தோட்டை துறைமுகம்

2008 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதியிலேயே ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கான மதிப்பீட்டு செலவுத்தொகை 361 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதற்கு சீனாவின் 'எக்சிம்' வங்கியே நிதியுதவி செய்கின்றது. துறைமுக நிர்மாணப் பணிகளுக்கான காலவரையறை 2011 என முன்னர் நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதும், 2010 இல் இப்பணிகளை நிறைவு செய்து, அவ்வாண்டிலேயே முதல் கப்பலை வெள்ளோட்டமிட துறைமுக அதிகாரசபை முடிவு செய்திருக்கிறது. தற்போது 85% வீதம் பூர்த்தியாகி உள்ளதுடன் இறங்குதுறையும் கட்டப்பட்டுவிட்டது.

## ஒலுவில் துறைமுகம்

2008 ஆம் ஆண்டு மே 06 ஆம் திகதி ஒலுவில் துறைமுகத்தை அமைப்பதற்கு டென்மார்க் உதவி வழங்கியது. இது கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவில் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான மதிப்பீட்டு செலவுத்தொகை 70 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

## காலி துறைமுகம்

இயற்கைத் துறைமுகமான காலி துறைமுகம் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டதால், மீள்நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இது உல்லாசப் பயணிகளுக்கான துறைமுகமாகவே தற்போது மீள்நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அதற்காக 125 கோடி ரூபா செலவழிக்கப்படுகிறது. அதிகளவு தொலைதொடர்பு வசதிகள், உயர் ரக மதுபானக் கடைகள், தீர்வையற்ற கடைகள் என்பன இங்கு அமைக்கப்பட இருக்கின்றன.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரத்தின் வளங்களை கொண்டு சென்று கிராமங்களை வளப்படுத்துவோம்



அழகிய சூழலில் சிறப்பாக அமைக்கப்பட்ட நகரில் வசிப்பதற்கு அனைவரும் நிச்சயம் விரும்புவார்கள். இம்முறை உலக குடியிருப்பு தினத்தில் நகரத் திட்டமிடல் பற்றி அதிக அக்கறை காட்டப்படுகின்றது.

## கிராமத்திலிருந்து நகருக்கு

அடிப்படை வசதிகளைப் பெறுவதற்காகவும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்காகவும் கிராமியப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் நகரில் குடிபுக முனைகின்றனர். எனினும், கிராமத்தில் இருந்து நகருக்கு வரும் பலர் குறைந்த வருமானம் பெறுவோராவர். அதிக வாழ்க்கைச் செலவுடன் நகர வாழ்க்கையில் ஈடுபடுவது அவர்களுக்கு கடினமானதாகும். இதனால், நகரில் குறைவான வசதிகளுடன் வாழ அவர்கள் தலைப்படுகின்றனர். இதனால், நகரில் உள்ள பிரச்சினைகள் மேலும் தீவிரமடைகின்றன. இதற்கு உரிய தீர்வு நகரத்தைப் போன்று கிராமங்களிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி கிராமங்களை அபிவிருத்தி செய்வதேயாகும்.

## கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் அவதானம் செலுத்தும்போது நகரங்களை மட்டும் திட்டமிடுதலும் அபிவிருத்தி செய்தலும் போதுமானதாக இல்லை என்பது தெளிவாகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகரத் திட்டமிடுதலை மேலும் வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்ள கிராமப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. இதன்படி நகரங்களில் உள்ள அடிப்படை வசதிகளைத் திட்டமிட்ட வகையில் கிராமப்பகுதிகளிலும் ஏற்படுத்துவதன் ஊடாக கிராமப்பகுதிகளை அபிவிருத்தி செய்யமுடியும். இந்த பணிகள் கடந்த பத்தாண்டுகளில் இலங்கையில் அமுல் செய்யப்பட்டன. இதனால், கிராமிய மக்கள் நகருக்கு வரும் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கிராமங்களும் நகரங்களும் ஒரேவாறு அபிவிருத்தி அடையும்பொழுது நாட்டின் பொருளாதாரமும் சிறப்படையும். அதனால், நகரை முகாமைத்துவம் செய்யும்பொழுது கிராமியப் பகுதிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.



## உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு

## 'எமது நகரத்தின் எதிர்காலத்தை திட்டமிடுவோம்'
## சித்திரம் வரைவோம் - கட்டுரை எழுதுவோம் - பரிசுகளை வெல்வோம்!

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டியொன்றை நடத்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் போட்டி 'விஜய்' மற்றும் 'விஜய' (சிங்களம்) பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. 'எமது நகரத்தின் எதிர்காலத்தை திட்டமிடுவோம்' என்ற பிரதான தொனிப்பொருளின் கீழ்;

- வாழ்வதற்கு உகந்த சுற்றுச் சூழலுடன்கூடிய நகரம் ஒன்றைத் திட்டமிடுதல்.
- நகரத்தின் வசதிகளை கிராமத்திற்குக் கொண்டு சென்று கிராமத்தை அபிவிருத்தி செய்தல்.
- இயற்கையாக மற்றும் மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட நாம் வாழும் கிராமத்தையும் நகரத்தையும் ஆபத்துக்கள் அற்ற பிரதேசமாக மாற்றுதல் ஆகிய விடயங்களை அடிப்படையாக வைத்து, சித்திரம் மற்றும் கட்டுரைகளை அனுப்புதல் வேண்டும்.

### சித்திரப் போட்டி

'ஏ' பிரிவு (1 ஆம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரை)
'பி' பிரிவு (6 ஆம் தரத்திலிருந்து 10 ஆம் தரம் வரை)
'சி' பிரிவு (11 ஆம் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரை)

மேற்கூறப்பட்ட மூன்று பிரிவுகளின் கீழ் சித்திரப்போட்டி நடைபெறும். 17x22 அங்குலம் அளவிலான சுவரொட்டி கடதாசியில் சித்திரம் வரையப்படல் வேண்டும். சித்திரம் வரைவதற்கு பெஸ்டல், நீர்ச்சாயம், நிறப் பென்சில் ஆகியவற்றில் எந்தவொரு நிற உபகரணத்தையேனும் பயன்படுத்தலாம்.

### கட்டுரைப் போட்டி

- கட்டுரைப் போட்டி 'ஏ' பிரிவு' (6 ஆம் தரத்திலிருந்து 10 ஆம் தரம் வரை) மற்றும் 'பி' பிரிவு (11 ஆம் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரை) ஆகிய பிரிவுகளின் கீழ் மட்டுமே நடைபெறும்.
- 'ஏ' பிரிவின் கீழ் கலந்துகொள்ளும் போட்டியாளர்களின் கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 'பி' பிரிவில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களின் கட்டுரைகள் 1500 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

### பரிசுகள்

நாட்டின் எந்தவொரு பகுதியிலிருக்கும் பாடசாலை மாணவர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம். குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் அடிப்படையில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு 2009 ஒக்டோபர் 5 ஆம் திகதி நீர்கொழும்பில் நடைபெறவுள்ள விழாவில் வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வருமாறு:

முதலாம் இடம் - பணப்பரிசாக ரூபா 10,000 உடன் பரிசு மற்றும் சான்றிதழ்.
இரண்டாம் இடம் - பணப்பரிசாக ரூபா 7,500 உடன் பரிசு மற்றும் சான்றிதழ்.
மூன்றாம் இடம் - பணப்பரிசாக ரூபா 5,000 உடன் பரிசு மற்றும் சான்றிதழ்.
திறமைப் பரிசு - தெரிவுசெய்யப்பட்ட ஐவருக்கு திறமைப் பரிசாக ரூபா 2000 பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

- சகல பிரிவுகளிலிருந்தும் 100 சிறந்த சித்திரம் மற்றும் கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டு, அந்த படைப்புகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### படைப்புகளை ஏற்றுக்கொள்ளல்

- போட்டியாளர்களின் சித்திரம் அல்லது கட்டுரை என்பனவற்றை அதிபரின் அத்தாட்சியுடனான விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து, 2009 செப்டெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.
- பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்றதொரு விண்ணப்பப்படிவத்தை A4 அளவுடைய தாளொன்றில் தயாரித்து, சித்திரம்/ கட்டுரையுடன் அவசியம் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

### சித்திரம் அல்லது கட்டுரை அனுப்பப்படவேண்டிய முகவரி:

உதவி முகாமையாளர்,
தகவல் மற்றும் விரிவாக்கல் பிரிவு,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
7 ஆவது மாடி, சேர் சித்தம்பலம் ஏ காட்னர் மாவத்தை, கொழும்பு-02.
மேலதிக விபரங்களைப் பெறவிரும்பின் 011-2447207 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

### 2009 உலக குடியிருப்பு தினம்
பாடசாலை சித்திரம்/கட்டுரைப் போட்டிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

பிரிவு [ ]

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: ..........
2. கற்கும் பாடசாலையின் பெயர் மற்றும் தரம்: ..........
..........
3. பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் மற்றும் தொலைபேசி இலக்கம்: ..........
4. சொந்த முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்: ..........
5. பிறந்த திகதி: ..........
6. 2009 செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு வயது: ..........

இந்த விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சித்திரம்/கட்டுரை எனது சொந்தப் படைப்பு என்பதனை உறுதிப்படுத்திக்கொள்கின்றேன். இந்தப் போட்டியின் அனைத்து நிபந்தனைகளுக்கும் ஏற்ப எனது படைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப் போட்டியின் நடுவர் குழாமினால் எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதனை தெரியப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் பெயர்: ..........

திகதி: .......... கையொப்பம்: ..........

இந்த விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சித்திரம்/கட்டுரை அவரது சொந்தப் படைப்பு என்பதனையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மை என்பதனையும் இதனூடாக உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .......... அதிபரின் கையொப்பம்: ..........




# கட்டார்

தேசிய இலச்சினை

எமிர்

பிரதமர்

**அரசு:** முடியரசு.
**நாட்டின் தலைவர் (எமிர்):** எச்.எச்.ஷேக் ஹமட் பின் கலீஃபா அல் தானி.
**பிரதமர்:** ஹமட் பின் ஜெசிம் பின் ஜாபிர் அல் தானி.
**சுதந்திரம்:** தற்போதைய ஆளும் குடும்பம் ஆட்சிக்கு வந்தது: 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி; பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது: 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் 03 ஆம் திகதி.
**தலைநகர்:** தோஹா.

## புவியியல்

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான கட்டார், அரேபிய தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சிறியதொரு தீபகற்பமாகும். **மேற்கு, தெற்கு**-பஹ்ரைன் வளைகுடா, சவூதி அரேபியா, **கிழக்கு**-அரேபியன் வளைகுடா என்பனவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது. இதன் வட மேற்கிலிருந்து 60 கி.மீ தூரத்தில் 'பஹ்ரைன்' நாடு அமைந்துள்ளது. நாட்டின் பெரும்பாலான நிலப்பரப்பு தட்டையான சமதரையைக்கொண்டதும் மணற்பாங்கானதுமாகக் காணப்படுகின்றது. இங்கு குறிப்பிடக்கூடிய ஆறுகளோ ஏரிகளோ இல்லை. உயர்ந்த சிகரமாக 338 அடி (103 மீற்றர்) உயரமுள்ள 'குராய்ன் அபு அல் போவ்ல்' பகுதி காணப்படுகின்றது. மிகத் தாழ்ந்த மையமாக பாரசீக வளைகுடா காணப்படுகின்றது.
**மொத்த நிலப்பரப்பு:** 4,416 ச.மைல் (11,437 ச.கி.மீற்றர்).



நாட்டின் தேசிய மிருகம்



மிருகக்காட்சிசாலை - தோஹா

**சனத்தொகை** (2008): 833,285 .
**தேசிய இனம்:** கட்டாரி.
**இனப் பிரிவுகள்:** அரேபியர் 40%, பாகிஸ்தானியர் 18%, இந்தியர் 18%, ஈரானியர் 10%, ஏனையோர் 14%.
**சமயம்** (2004): இஸ்லாம் 77.5%, கிறிஸ்தவம் 8.5%, ஏனையோர் 14%.
**மொழிகள்:** அரபு (உத்தியோகபூர்வம்), ஆங்கிலம் (பொதுவான இரண்டாம் மொழி).
**எழுத்தறிவு வீதம்** (2004): 89%. **நாணயம்:** கட்டார் ரியால்(QAR).
**நிலப்பிரிவுகள்:** 10 மாநகரப் பகுதிகள்.
**இணையத்தளக் குறியீடு:** .qa
**சர்வதேச தொலைபேசி இலக்கம்:** 974

தோஹா நகரின் ஒரு பகுதி






அல் ஜஸீரா தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமையகம்

## தேசிய சின்னங்கள்

**மிருகம்** - ஒரிக்ஸ்;(பறவை, மலர், மரம், விளையாட்டு என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை).

## தேசிய கீதம்

Qasaman
qasaman
qasaman biman rafa' as-sama'
Qasaman biman nashraz ziye'
Qataron satbaqa x.auratan.......என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

முற்காலத்தில் பஹ்ரைன் ஷேக்குகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வந்த கட்டாரில் 1867 இல் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் அவர்களின் ஆட்சி வீழ்ச்சி அடைந்தது. அதன் பின்னர் பிரித்தானியாவின் ஆதரவுடன் முஹம்மத் இப்னு தானி அல் தானியின் தலைமையிலான கட்டாரி குடும்பத்தின்கீழ் நாடு ஆளப்பட்டது. 1893 இல் ஒட்டோமன் துருக்கியின் தாக்குதலுக்கு இலக்கானது. 1916 முதல் பிரித்தானியரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்து, 1971 இல் சுதந்திரம் அடைந்தது. 1995 ஜூன் மாதம் இளவரசர் ஷேக் ஹமீத் பின் கலீஃபா அல் தானியின் தலைமையில் ஆட்சி அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2005 ஜூன் 9 ஆம் திகதி கட்டார் புதிய அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தியது. 45 பிரதிநிதிகளைக்கொண்ட நாடாளுமன்றத்தில் 30 பேர் ஜனநாயக ரீதியிலான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுவர். ஏனைய 15 பேரும் மன்னனால் தெரிவுசெய்யப்படுவர்.

## கலாசாரம்

கட்டாரின் கலாசாரமானது (குறிப்பாக இசை, கலை, உடை, உணவுப் பழக்கம் என அனைத்திலும்) ஏனைய பாரசீகக் குடாவிலுள்ள அரேபிய நாடுகளை ஒத்ததாகவே காணப்படுகின்றது.அரேபியர்கள் சவூதிஅரேபியாவில் இருந்து கட்டார் உள்ளிட்ட ஏனைய வளைகுடா பிரதேசங்களுக்கு குடியேறினர்.அதனால்,பாரசீக வளைகுடா நாடுகளில், நாட்டுக்கு நாடு சிறியளவிலான கலாசார மாறுபாடுகளே காணப்படுகின்றன.

## காலநிலை

ஜூன் முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதி கோடை காலமாகும். அதிக வெப்பம்கொண்ட இக்காலப்பகுதியில் 120°F வரை வெப்பம் உயர்வடையும். நொவெம்பர் முதல் மே வரை குளிர் காலம் நிலவுகின்றது. இதன்போது வெப்பநிலை 62°F ஆகக் குறைவடையும்.




## பொருளாதாரம்

**விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை** (பயிர்ச்செய்கைக்கேற்ற நிலம்-1.64%): பழவகைகள், மரக்கறி வகைகள், கோழி, மாட்டுப்பண்ணை உற்பத்திப் பொருட்கள், இறைச்சி, மீன் என்பன. **தொழிலாளர் தொகை** (2007): 638,000; **வேலையற்றோர் தொகை:** 0.7%. **கைத்தொழில்கள்:** மசகு எண்ணெய் உற்பத்தி, கனிய எண்ணெய் சுத்திகரிப்பு, அமோனியா, பெற்றோலிய ரசாயனங்கள், இரும்பு உற்பத்திப் பொருட்கள், சீமெந்து,வர்த்தக கப்பல்களைப் பழுதுபார்த்தல்.
**இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, மீன்.
**ஏற்றுமதிகள்:** இயற்கைத் திரவ வாயு, பெற்றோலிய உற்பத்திகள், உரவகைகள், இரும்புப் பொருட்கள்.
**இறக்குமதிகள்:** இயந்திர மற்றும் போக்குவரத்து சாதனங்கள், உணவு வகைகள், ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், இந்தியா, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு ராச்சியம், ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைப்பேசி பாவனையாளர் (2006)-238,300; செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்கள் (2006)-919,800. **வானொலி நிலையங்கள்** (1998): AM-6,FM-5,SW-1, **தொலைக்காட்சி நிலையங்கள்**(2001):1. **இணையத்தள வழங்குனர்** (2007): 19 ; இணையத்தளப் பாவனையாளர் தொகை (2006): 289,900 .

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** 1230 கி.மீ, **துறையும் துறைமுகமும்:** தோஹா, ஹாலுல் தீவு, உம் சைத் (முசாயித்). **விமான நிலையங்கள்** (2007): 5 .



## பிரசித்தி பெற்ற இடங்கள் சில.....

✱ **அலடின் ராச்சியம்** (பொழுதுபோக்கு நகரம்): இங்கு செயற்கை ஏரிகள், வாடி வீடுகள், திரையரங்குகள் என்பன காணப்படுகின்றன. ✱ **மிருகக்காட்சிசாலை:** தலைநகர் தோஹாவில் இருந்து 20 கி.மீற்றர் தொலைவில் சிறுபிள்ளைகளுக்காக நிறுவப்பட்டுள்ளது. ✱ **அல் ருமாலியா பூங்கா** ✱ **டாஹ்ல் எல்-ஹமாம் பொதுப் பூங்கா** ✱ **கோர் அல் உடைட் கடற்கரை** ✱ **அல்-ஜசாஸியா** ✱ **ஒரிக்ஸ் பண்ணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 4 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் I (தொடர்ச்சி...)

பெயர்: .................................... நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

### பொது அறிவு, பொது விவேகம், கட்டுரை

01. (1) இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
.......................................................
(2) இலங்கையின் தேசிய மரம் எது?
.......................................................
(3) கிரிக்கெட் போட்டியில் ஒரு குழுவில் எத்தனை பேர் விளையாடுவர்?
.......................................................
(4) வீதியில் நடந்து செல்பவர்கள் எந்தப் பக்கத்தால் நடந்து செல்லவேண்டும்?
.......................................................
(5) கிராமிய விளையாட்டுக்கள் இரண்டு தருக?
.......................................................

*(10 புள்ளிகள்)*

02. வேறுபட்ட சொல்லின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1) 1. கத்தரி | 2. தக்காளி | 3. கமுகு | 4. வெண்டி |
| 2) 1. தென்னை | 2. வேம்பு | 3. மா | 4. பலா |
| 3) 1. கிளி | 2. சிலந்தி | 3. மைனா | 4. குயில் |
| 4) 1. நாய் | 2. பசு | 3. பூனை | 4. சிங்கம் |
| 5) 1. மேசை | 2. கதிரை | 3. கட்டில் | 4. கத்தி |

*(10 புள்ளிகள்)*




03. அடுத்து வரும் எண்களை எழுதுக.

1) 1, 2, 3, 4, —, —
2) 3, 6, 9, 12, —, —
3) 1, 5, 9, 13, —, —
4) 5, 10, 15, 20, —, —
5) 85, 75, 65, 55, —, —

*(10 புள்ளிகள்)*

04. எங்கள் வீட்டுப் பசு என்ற தலைப்பில் 5 வாக்கியங்கள் எழுதுக.
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................

*(20 புள்ளிகள்)*

**மாதிரி வினாத்தாள் I இன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## தரம் 4 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்-2

பெயர்: .................................... நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

### தமிழ்மொழி

01. பின்வரும் பந்தியை வாசித்து, அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளை எழுதுக.

**காட்டுராஜா**

**சிங்கத்தை காட்டுராஜா என்றும் விலங்குகளின் அரசன் என்றும் கூறுகின்றோம். புலி, சிறுத்தையைப் போல் சிங்கமும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தது. புலியைத் தவிர, பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா விலங்குகளும் வலிமையிலும் கம்பீரத்திலும் சிங்கத்தை விடக் குறைந்தவை. சிங்கத்தின் பரந்த முகமும் பிடரி முடியும் தரை அதிரும் கர்ஜனையும் தைரியமும்தான் சிங்கத்தைக் காட்டுராஜாவாக்கி இருக்கின்றன. சிங்கம் கர்ஜித்தால் யானை உட்பட அனைத்து விலங்குகளும் பறவைகளும் பயந்து நடுங்கும்.**

(1) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விலங்குகளின் பெயர்களைத் தருக.
.......................................................
(2) யானை பிளிறும் என்பதுபோல் சிங்கம்?........................
(3) சிங்கம் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தது?........................
(4) சிங்கத்தைப் போன்று வலிமை மிக்க விலங்கு எது?........................
(5) காட்டுராஜா என அழைக்கப்படும் மிருகம் எது?........................

*(5x2=10 புள்ளிகள்)*

02. கீழ்வரும் சொற்களை அவற்றின் பொருள் வேற்றுமை தோன்ற வாக்கியம் அமைக்குக.
(1) வழி:- ........................
(2) வளி:- ........................
(3) வலி:- ........................
(4) கலை:- ........................
(5) களை:- ........................

*(5x4=10 புள்ளிகள்)*

03. சரியான விடையை எழுதுக.
01. ஒத்தகருத்து தருக. (1) தூய்மை:-................ (2) மிடி:-................
02. எதிர்க்கருத்து தருக. (1) புகழ்:-................ (2) இலாபம்:-................
03. சேர்த்து எழுதுக. (1) முள்+செடி=................ (2) மூன்று+பத்து=................
04 பிரித்து எழுதுக. (1) மணியோசை=................ (2) கற்பாறை=................
05. மாவின் பிஞ்சு வடு போல பலாவின் பிஞ்சு:................
06. யானையின் ஆண் களிறு போல ஆட்டின் ஆண்:................
07. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை:................
08. கதவு, குடம், கிழக்கு, கானகம், கூரை இவற்றை 'க' வரிசையில் எழுதுக.
.......................................................
09. வென்னீர் என்பதை திருத்தி எழுதுக. ................
10. எதிர்ப்பாற் சொல் தருக. (1) குமரன்:- ................ (2) திருடன்:-................

*(10x2=20 புள்ளிகள்)*

### கணிதம்

01. முந்திய, பிந்திய எண்களை எழுதுக.
(1) ............, 200, ............
(2) ............, 249, ............
(3) ............, 1999, ............
(4) ............, 2909, ............
(5) ............, 3499, ............

*(5x2=10 புள்ளிகள்)*

02.

| A | B | C |
|---|---|---|
| 458 | 470 | 425 |

(1) A, B, C ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்துக................
(2) மிகச் சிறிய கூட்டுத்தொகையைப் பெறக்கூடிய இரு எண்கள் எவை?................
(3) கூட்டுத்தொகை 928 ஐப் பெறக்கூடிய இரு எண்கள் எவை?................
(4) கூட்டுத்தொகை 895 ஐப் பெறக்கூடிய இரு எண்கள் எவை?................
(5) A, B, C ஆகிய மூன்று எண்களினதும் கூட்டுத்தொகை யாது?................

*(5x2=10 புள்ளிகள்)*

03. கூட்டுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 47 | 436 | 477 | 851 | 635 |
| + 55 | + 127 | + 203 | + 108 | + 256 |

*(5x2=10 புள்ளிகள்)*

04. கழியுங்கள்.
(1) 528-359 = ................
(2) 100-21 = ................
(3) 672-383 = ................
(4) 726-227 = ................
(5) 812-614 = ................

*(5x2=10 புள்ளிகள்)*

05. எண்கோலத்தின் இடைவெளியில் வரவேண்டிய எண்களை எழுதுக.
(1) 12, 14, 16, 18, ........., .........
(2) 18, 15, 12, 9, ........., .........
(3) 10, 13, 16, 19, ........., .........
(4) 12, 17, 22, 27 ........., .........
(5) 39, 34, 29, 24 ........., .........

*(5x2=10 புள்ளிகள்)*

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் மின்சாரத்தில் இ

**இலங்கையில் உள்ள சில கிராமங்களுக்கு இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. அக்கிராமங்களுக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்வதாயின், இலங்கையின் தேசிய மின்உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதனை மேற்கொள்வதற்கு மின்உற்பத்திக்கான புதிய வழிகளைத் தேடிச்செல்ல வேண்டிவரும். அதன்போது, மிகவும் இலாபகரமான மின்உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துவது மிக முக்கியமானதாகும். வினைத்திறன் மிகுந்த மின்சார விநியோகத்தினூடாக கிராமங்களின் சகல வீடுகளிலும் மின்குமிழ்கள் எரியச்செய்யப்படுமாயின், அது இந்நாட்டின் மின்சக்தி உற்பத்தியிலும் அபிவிருத்தியிலும் ஒரு முக்கிய நிகழ்வாக அமையும்.**


தற்பொழுது இந்நாட்டின் மின் உற்பத்தித் தேவையில் கூடிய சதவீதத்தைப் பூர்த்தி செய்வது அனல் மின்நிலையங்களாகும். எஞ்சியது நீர் மின்சாரத்தினாலும் மிகச்சிறிய அளவில் காற்றுச் சக்தியாலும் பூர்த்தி செய்யப்படுகின்றது.

1980 தசாப்தத்தின் முதல் அரைப்பகுதி வரை இலங்கையின் மின்சாரத் தேவைகளில் கூடிய சதவீதம் நீர் மின்சாரத்தினாலேயே பூர்த்தி செய்யப்பட்டது. எனினும், மின்தேவை அதிகரிக்க, அதிகரிக்க அதிக செலவினை ஏற்படுத்தக்கூடிய அனல் மின்நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அது இந்நாட்டின் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. அந்தவகையில், உலகில் அதிகளவான இலாபகரமான மின் உற்பத்தி முறை நீர் மின்சார உற்பத்தி முறையாகும். அதனால்தான் இலங்கையில் நீரை உச்ச அளவு பயன்படுத்தி, மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கின்றது. அத்துடன், அதற்கான செயற்றிட்டங்களை சூழலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் மேற்கொள்வதும் அவசியமாகும்.

## நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் முறை

பாய்ந்தோடும் ஆற்றினை மறித்து-அணைகட்டி-நீர்த்தேக்கத்தை உருவாக்கி நீரைத் தேக்குவர். அதன்பின் அந்த நீர் கீழ்நோக்கி விழும் வகையில் அல்லது சுரங்கப் பாதைகளூடாகப் பாய்ச்சப்பட்டு 'டர்பைன்' இயங்கச் செய்யப்படும். இந்த 'டர்பைன்' மூலமாக மின்பிறப்பாக்கி செயல்படுத்தப்பட்டு மின் உற்பத்தியாகின்றது. நீர்த்தேக்கத்தில் தேங்கியிருக்கும் நீர் மட்டத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு வேறுபடும். மழையில்லாத காலங்களில் நீர் மின்சார உற்பத்தியின் கனவளவு


### நீர் மின் உற்பத்திநிலையத்தினுள்




### இலங்கையில் மின்விநியோக சதவீதம் 82%





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்து ஒளி

அதன்பின்
பகையில்
டாகப்
பங்கச்
ன'

கத்தில்
ன்
ய்யப்படும்
டும்.
ர் மின்சார




குறைவடைவதற்கு இதுவே காரணமாகும்.

## இலங்கையின் முதலாவது நீர் மின் உற்பத்திநிலையம்

லக்ஷபான மின் உற்பத்தி நிலையமானது இலங்கையின் முதலாவது நீர் மின் உற்பத்தி நிலையமாகும். 25 மெகா வொட் அளவு இங்கு மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. டி.ஜே.விமலசுரேந்திரவின் அரும்பெரும் முயற்சியால் அமைக்கப்பட்ட 'லக்ஷபான' மின் உற்பத்திநிலையத்தினூடாகவே இலங்கையில் மின் உற்பத்தி ஆரம்பமாகியது.

## துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டம் இதுவாகும். 'மகாவலி' ஆற்றுத்தொகுதியை அடிப்படையாக வைத்து நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்தல், நீர்ப்பாசனத்தை வழங்கல், விவசாயக் கைத்தொழிலை கட்டி எழுப்புதல், புதிய குடியேற்றத் திட்டங்களை அமைத்தல், கைத்தொழில் அபிவிருத்தியை மேற்கொள்ளல், அதிக வேலை வாய்ப்பினை வழங்கல் போன்றவை துரித 'மகாவலி' அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும். மகாவலித் திட்டத்தின்கீழ் 6 மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விக்டோரியா, கொத்மலை, ரந்தெனிகலை, ரன்டெம்பே, போவதென்ன, உக்குவளை ஆகியனவே அந்த மின் உற்பத்தி நிலையங்களாகும்.

## லக்ஷபான கூட்டு மின் உற்பத்திநிலையம்



இலங்கை தேசிய மின் உற்பத்தியில் மகாவலி கங்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. அடுத்ததாக களனி கங்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. களனி கங்கையின் கிளை நதிகளாகிய கெஹெல்கமுவ, மஸ்கெலிய ஓய ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அதற்கருகில் நிறுவப்பட்ட மின் உற்பத்திநிலையமே லக்ஷபான கூட்டு மின் உற்பத்தி நிலையமாகும். பழைய லக்ஷபான, புதிய லக்ஷபான, விமலசுரேந்திர, சமனல (பொல்பிடிய), கெனியொன் ஆகிய மின் உற்பத்தி நிலையங்கள் இக்கூட்டு மின் உற்பத்தி நிலையத்தினுள் அடங்கும். ப்ரோட்லண்ட்ஸ் மின் உற்பத்தி நிலையமே களனிகங்கையை அண்டி நிர்மாணிக்கப்படும் இறுதி மின் உற்பத்தி நிலையமாகும். இதற்கான நீர்த்தேக்கத்தை மஸ்கெலிய ஓயாவுக்கு குறுக்காக அமைத்து, அதிலிருந்து 35 மெகா வொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

## இலங்கையில் உள்ள நீர் மின் உற்பத்திநிலையங்கள்

| பராமரிக்கப்பட்ட ஆண்டு | நீர் மின் உற்பத்திநிலையம் | உற்பத்தி செய்யப்படும் மி.சக்தியின் அளவு மெகா வொட் |
|---|---|---|
| 1950 | லக்ஷபான | 50 |
| 1963 | இகினியாகல | 11 |
| 1965 | விமலசுரேந்திர | 50 |
| 1969 | சமனல | 75 |
| 1969 | உடவளவ | 06 |
| 1974 | புதிய லக்ஷபான | 100 |
| 1976 | உகுவளை | 38 |
| 1981 | போவதென்ன | 40 |
| 1982 | கெனியொன் | 30 |
| 1985 | விக்டோரியா | 210 |
| 1985 | கொத்மலை | 201 |
| 1986 | ரன்தெனிகல | 122 |
| 1990 | ரன்டெம்பே | 49 |
| 1992 | சமனலவெவ | 120 |
| 2003 | குகுலு கங்கை | 70 |
| தனியார் நிறுவனத்தின் கீழுள்ள மின் உற்பத்தி நிலையம் | திக் ஓய, சீதா எலிய, வட்டவளை | 20 |
| நிர்மாணிக்கப்பட்டு வருகின்றவை | மேல் கொத்மலை | 150 |
| உத்தேசிக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் | ப்ரோட்லண்ட்ஸ் | 35 |
| | உமா ஓயா | 120 |
| | கிங்கங்கை | 49 |
| | மொரகொல்ல | 27 |

## இலாபகரமான நீர் மின்சாரம்

இலங்கையில் தற்போது நுரைச்சோலை அனல் மின்நிலையம், கெரவலப்பிட்டிய வெப்ப மின்நிலையம், மேல் கொத்மலை நீர் மின் நிலையம் என்பன அமைக்கப் பட்டு வருகின்றன. இதன்மூலம் எதிர்கால மின்சக்தித் தேவைகளை நிறைவேற்றமுடியும் என எதிர்பார்க்கப் படுகின்றது. எனினும், நாளுக்குநாள் அதிகரித்துவரும் கனிய எண்ணெய்யின் விலை அதிகரிப்பால், எண்ணெய்யை எரித்து மின்சாரத்தை உற்பத்தி செய்வ தற்கு பெருந்தொகைப் பணம் செலவா கின்றது. எனினும், நிலக்கரி அனல் மின் நிலையங்கள் மூலம் மின்சாரத் தேவை ஓரளவு நிவர்த்தி செய்யப்படுகின்றது.

இவ்வனைத்து உற்பத்தி முறைகளும் நீர் மின்சார உற்பத்தியைப் போன்று இலாபகரமானதல்ல. எனவே, சிறிய நீர் மின் உற்பத்திநிலையங்களை அமைப்பதில் கவனம் செலுத்துவது வெற்றிகரமான முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

## பொருளாதார முக்கியத்துவம்

இவ்வாறு சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும்பொழுது பாரிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்படாது. எனவே, இதன்போது ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புகளும் மிகக்குறைவாகவே இருக்கும். அத்துடன், பாரிய நீர்த்தேக் கங்களை அமைக்கும்போது ஏற்படும் மனித இடம்பெயர்வுகளும் மட்டுப்படுத்தப்படும். இதனால், சமூகப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பில்லை. பொதுவாக மலையகப் பகுதிகளில் காணப்படுகின்ற நீர்வீழ்ச்சிகள் அப்பகு திக்குரிய நீர் மின்சாரத்தை வழங்கும் பெரும் வளமாக விளங்குவதால்,அவற் றிலிருந்து மின் உற்பத்தியைப் பெறுவது மிக இலாபகரமானதாக அமையும்.

இவ்வாறு நீர்வீழ்ச்சிகளைப் பயன்படுத்தி சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை கிராமங்களில் அமைப் பதனூடாக கிராமிய கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவலாம். விவசா யத்தை மையமாகக்கொண்ட கைத் தொழில்கள், ஏனைய கிராமிய கைத் தொழில்கள் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராமங்களில் அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தலாம். இதனால், வேலை தேடி நகரங்களை நாடுபவர்கள் தத்தமது கிராமங்களிலேயே வேலை வாய்ப்பை பெறமுடியும்.

அதிக செலவில் நிலக்கரி அனல் மின் நிலையம், எண்ணெய் வெப்ப மின் நிலையம் ஆகியவற்றை அமைத்து, தேசிய மின்சக்தி உற்பத்தியின் அளவை கூட்டுவதைவிட, இத்தகைய சிறிய நீர் மின் நிலையங்களை அதிகளவில் நிர்மாணித்து இந்நாட்டின் நீர் வளத்திலி ருந்து உச்ச பயன்பாட்டைப் பெறலாம். அதன்மூலம் எண்ணெய் மின்நிலையங் களால் அந்நிய நாட்டுக்கு செல்லும் பணத்தைக் குறைத்துக்கொள்ளலாம். இது பொருளாதாரத்தில் பாரிய இலாபத்தை ஈட்டித்தருவதாக அமையும்.




## மின்சாரத்தை சிக்கனப்படுத்தியவாறு குளிர்சாதனப்பெட்டியைப் பயன்படுத்துவோம்

உணவு வகைகள் கெட்டுப்போகாமல் பாதுகாக்கும் குளிர்சாதனப்பெட்டி யானது அதிகளவில் மின்சாரத்தை உள்வாங்கும் ஓர் உபகரணமாகும். இதற்கு 130 வொட் அளவு மின்சாரம் செலவாகின்றது. எனவே, கீழ் குறிப்பிடப்பட் டுள்ள வழிகளைப் பின்பற்றுவதனூடாக குளிர்சாதனப்பெட்டி மூலம் விரயமாகும் மின்சாரத்தை கட்டுப்படுத்தலாம்.



* குளிர்சாதனப்பெட்டியினுள் உணவுப் பொருட்களை நெருக்கமாக வைக்காதீர்கள்.
* குளிர்சாதனப்பெட்டியின் கதவுகளை மூடி/திறக்கும் தடவைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தல்.
* சமையலறையில் குளிர்சாதனப் பெட்டியை வைக்கும்போது, சுவருக்கும் குளிர்சாதனப் பெட்டிக்கும் இடையே 10 அங்குல இடைவெளி இருக்க வேண்டும்.
* குளிர்சாதனப்பெட்டியை சூரியஒளி நேராகப்படுமிடத்திலோ, அடுப்புக்கு அருகிலோ வைத்தல் கூடாது.
* சூடான உணவுகளை ஆறவைத்த பின்னர் குளிர்சாதன்ப்பெட்டியினுள் வையுங்கள்.
* குளிரூட்டப்பட வேண்டிய உணவுப்பொருட்கள் இல்லாதபட்சத்தில் குளிர்சாதனப்பெட்டியின் இயக்கத்தை நிறுத்தி வையுங்கள்.
* அதிகுளிரூட்டப்பட்ட உணவுகளை சமைப்பதற்கு வெளியே எடுக்கமுன்னர் அதனைக் குளிர்சாதனப்பெட்டியின் கீழ்ப்பகுதியில் வையுங்கள். அந்த உணவு அதிகுளிரிலிருந்து விடுபட்டு குளிர்ச்சியடையும்போது வெப்பத்தினை உறிஞ்சிக்கொள்வதால், குளிர்சாதனப்பெட்டியில் விரயமாகும் சக்தியைக் குறைத்துக்கொள்ளலாம்.

## வாரந்தோறும் ரூபா 40,000 வெல்லுங்கள்!

'தூர நோக்குவோம்-ஒன்றிணைவோம்-மின்சாரத்தை சேமிப்போம்' எனும் தொனிப்பொருளில் 'விஜய்'யில் வாரம்தோறும் வெளியாகும் கட்டுரைத்தொடரில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளை அனுப்பி, வாரந்தோறும் தலா ரூபா 1000.00 வீதம் 40 பணப்பரிசுகளை வெற்றி கொள்ள 40 பேர்களுக்கு வாய்ப்புண்டு.

### இவ்வார வினாக்கள்

1. இலங்கையில் நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள மின் உற்பத்திநிலையங்கள் 4 இனை எழுதுக.
2. அதிகுளிரூட்டப்பட்ட உணவு வகைகளை சமைப்பதற்கு முன்னர் குளிர்சாதனப்பெட்டியின் கீழ்ப்பகுதியில் வைப்பது ஏன்?

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**


மின்சாரத்தை சேமிப்போம்-5,
'விஜய்'
த.பெ இல: 2037,
கொழும்பு.

உங்கள் பெயர், முகவரியை ஆங்கிலத்தில் எழுதவும்

கேள்வி இல-03 இன் பரிசுபெறுவோர் விபரம் 20 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லமுடியாத போட்டியா?



பவழ நாட்டு அரசருக்கு பூங்குழலி என்ற மகள் இருந்தாள். அவள் பேரழகுடன் விளங்கினாள். காலப் போக்கில் அவள் திருமணப் பருவத்தை அடைந்தாள். பல நாட்டு அரசர்களும் அவளைத் திருமணம் செய்ய விரும்பினர். ஆனால், பவழ நாட்டு அரசரோ, ''என் மகள் அறிவு நிறைந்த ஒருவனையே மணப்பாள். நான் வைக்கும் இரண்டு போட்டிகளில் யார் வெற்றி பெறுகிறாரோ அவரே மணமகன்'' என்றார்.

''என்ன போட்டி வைக்கிறீர்கள்? கூறுங்கள்'' என்று கேட்டனர் ஏனைய நாட்டு இளவரசர்கள்.

''உலகத்தில் உள்ள தண்ணீர் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் கொண்டுவரவேண்டும். இதுதான் முதல் போட்டி.

அதேபோல் ஆ! ஐயோ பழங்களை இன்னொரு பாத்திரத்தில் கொண்டு வரவேண்டும். இதுதான் இரண்டாவது போட்டி. இப்போட்டிகளில் வெல்பவர் யாராக இருந்தாலும் அவர் என் மகளை மணக்கலாம்'' என்றார் அரசன்.

இதைக் கேட்ட இளவரசர்கள் பலர் திகைத்தனர். ''இளவரசிக்கு திருமணம் செய்து வைக்கும் எண்ணம் இந்த அரசருக்கு இல்லை. அதனால்தான் யாராலும் இயலாத போட்டிகளை அறிவித்துள்ளார்'' என்று கூறியபடி அனைவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

வேங்கை நாட்டு இளவரசன் எழிலன் பூங்குழலியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டான். அரசன் வைத்த போட்டிகள் பற்றியும் அறிந்தான்.

''எப்படியும் அவளைத் திருமணம் செய்யவேண்டும். அந்தப் போட்டிகளில் வெற்றி பெறவேண்டும்'' என எண்ணிய அவன் ஏதேனும் வழி உள்ளதா? என சிந்தித்தான். வழி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. தன் நாட்டிலிருக்கும் பார்வையற்ற பெரியவர் மதியழகர் பற்றிய நினைவு அவனுக்கு வந்தது. அறிவு நிறைந்த அவர் எதற்கும் நல்ல தீர்வு காண்பார் என்று எழிலன் நினைத்தான். மதியழகரிடம் சென்ற அவன் அவரை வணங்கி, பவழ நாட்டு அரசர் வைத்திருக்கும் போட்டிகள் பற்றிக் கூறினான். வெற்றி பெற ஏதேனும் வழி உள்ளதா? எனவும் கேட்டான். அதுகேட்டு சிரித்த அவர் அரசனுக்கு அறிவே இல்லையா? இளவரசியை மணக்க இப்படி எளிய போட்டிகளையா வைப்பது?'' என்றுகேட்டார்.

''இவை எளியபோட்டிகளா? இதுவரை யாராலும் வெற்றி பெற முடியவில்லையே'' என்றான் அவன்

''முட்டாள்களால் எப்படி விடை கண்டுபிடிக்க முடியும்?'' என்று கேட்டார் அவர்.




''இளவரசியைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். அந்தப் போட்டிகளில் வெல்ல நான் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டான் அவன். அவரும் வழி முறைகளை சொன்னார். மகிழ்ச்சியடைந்த அவன் இரண்டு பாத்திரங்களுடன் பவழ நாட்டு அரசவைக்குச் சென்றான்.

''அரசே! இளவரசியை திருமணம் செய்ய வந்துள்ளேன். இதோ! இந்த முதல் பாத்திரத்தில் நீங்கள் கேட்டபடி உலகத்தில் உள்ள நீர் எல்லாம் இருக்கிறது'' என்றான். அரசன் வியப்படைந்து எப்படி உன்னால் இது முடிந்தது? என்று கேட்டான். அதற்கு அவன், ''இந்த முதல் பானையில் இருப்பது கடல் நீர். உலகத்தில் உள்ள நீர் அனைத்தும் மூன்று வகைப்படும். அவை ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்பனவாகும். அந்த மூன்று நீரும் கடல்நீரில் உள்ளது. ஆகவே, உலகத்து நீர் எல்லாம் முதல் பானைக்குள் உள்ளது'' என்றான்.

இதைக்கேட்ட அரசன் ''முதல் போட்டியில் நீ வென்று விட்டாய்'' என்றான்.

''அரசே! இரண்டாவது போட்டியான ஆ! ஐயோ பழங்கள் இந்தப் பானைக்குள் உள்ளன. நீங்கள் கையை விட்டு அந்தப் பழங்களை எடுக்கலாம். நீங்கள் கேட்ட பழங்கள் அவை என ஒப்புக் கொள்வீர்கள்'' என்றான் அவன்.

''இந்தப் பானைக்குள் எந்தப் பழங்கள் வேண்டுமானாலும் இருக்கட்டும். நான் உள்ளே கையை விட்டு அவற்றை எடுப்பேன். நான் கேட்ட பழங்கள் இவை இல்லை என்பேன். இவனும் ஏமாந்து போவான்'' என்று நினைத்தபடி பானைக்குள் கையை விட்டான் அரசன்.

அவ்வளவுதான் ''ஆ! ஐயோ!'' என அலறியபடி கையை வெளியே எடுத்தான்.

''அரசே! நீங்கள் கேட்ட ஆ! ஐயோ பழங்கள்தான் உள்ளே உள்ளன. ஆ! ஐயோ என்று அலறி நீங்களும் அதை ஒப்புக்கொண்டீர்கள். பானைக்குள் உயிருடன் நண்டுகள் உள்ளன. அவை கடித்ததால் உங்கள் கையில் சிறிது நேரம் வலி இருக்கும். பிறகு சரியாகி விடும். இரண்டாவது போட்டியிலும் நான் வெற்றி பெற்றுவிட்டேன் அல்லவா?'' என்று கேட்டான் எழிலன்.

இதனால், மகிழ்ச்சியடைந்த அரசன், ''உன் அறிவுக்கூர்மையைப் பாராட்டுகிறேன். உனக்கும் இளவரசிக்கும் விரைவில் திருமணம் நிகழும்'' என்று கூறினான்.

செ.சாரங்கன்,
யா/சாவகச்சேரி இந்து கல்.,
யாழ்ப்பாணம்.



## அன்னை

பத்து மாதம் சுமந்து என்னைப்
பெற்றெடுத்து வளர்த்த அன்னை
என் வளர்ச்சிக்காய் உதிரம் தன்னை
பாலாய் ஊட்டி வளர்த்தாள்!
கல்வி அறிவு ஊட்டி என்னை
நல்வழி காட்டுவாள் என் அன்னை!

யாஸிர் நிஸார்தீன்,
டி.எஸ்.சேனநாயக்க கல்.,

## உறுதி கொள்வாய்



மது எனும் மாயையால் மாசுபட்டு
மதி மயங்கிக் கிடக்கும் மானிடா!
மது உனக்குத் தருவது
போதை மட்டுமல்ல....
அகால மரணமும் நிம்மதியற்ற
வாழ்வுந்தான்....
மானத்தோடு வாழவேண்டிய நீ
மதி மயங்கி வீதியில் கிடப்பதற்கு
அற்பசுகம் கொடுக்கும் அரக்க குணம்
படைத்த மதுவே காரணம்.
ஆறறிவு நிரம்பிய மனிதனே!
உன் சிந்தையை திசை திருப்பு,
ஒரு கோப்பை மதுவை நாடி...
ஒழுங்கற்று வாழாது
சரியாக சிந்தித்து முறையாக
செயல்பட்டு..
உயர்வாக வாழ...
இன்றே உறுதி கொள்!

பெ.கல்யாணி,
வ/பெரிய கோமரசன்குளம் ம.வித்.,
வவுனியா.

## என்ன காரணம்



ஒருமுறை கொங்கிரஸ் கூட்டம் ஒன்றிற்கு மூதறிஞர்களான ராஜாஜியும் பெரியார் ஈ.வே.இராமசாமியும் சென்றிருந்தனர். அப்பொழுது பெரியார் காங்கிரஸில் இருந்தார். அதனால், அவருக்கும் ராஜாஜிக்குமிடையே நல்ல நட்பு இருந்தது.

மாநாட்டில் அப்பொழுது ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ராஜாஜி பெரியாரிடம் வந்து அந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுங்கள்'' என்றார்.

''ஏன் என்னை எதிர்க்கச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார் பெரியார்.

''அதையெல்லாம் பிறகு சொல்கிறேன். முதலில் போய் எதிர்த்துப் பேசுங்கள்'' என்றார் ராஜாஜி.

பெரியாரும் இணங்கினார். எழுந்தார். அந்தத் தீர்மானத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்தெறிந்தார். அன்று அந்தத் தீர்மானம் அவர் வாயில் அகப்பட்டுக்கொண்டு பட்டபாடு பெரும்பாடாகும். பெரியார் எதிர்த்ததால் அந்தத் தீர்மானம் தோற்றுப் போய்விட்டது.

வெற்றி வீரராகப் பெரியார் ராஜாஜியிடம் வந்தார். ''நீங்கள் சொன்னபடி செய்துவிட்டேன். இப்பொழுதாவது சொல்லுங்கள்.... அந்தத் தீர்மானத்தை எதிர்க்கச் சொன்ன காரணத்தை...'' என்று கேட்டார்.

''என்ன என்னிடம் கேட்கிறீர்கள்? காரணத்தை தாங்கள்தாம் கூறிவிட்டீர்களே. நான் என்ன சொல்வது?'' என்றார் ராஜாஜி கண்களில் கேலி மின்ன.

தொகுப்பு: மர்ஸியா நாபிர்,
பேருவளை.

## சிறந்த சிந்தனைகள்

- சிவப்பு மனிதனின் நிழலும் கறுப்புத்தான்!
  கறுப்பு மனிதனின் இரத்தமும் சிவப்புத்தான்!
  மனிதா! வண்ணங்களில் இல்லையடா வாழ்க்கை!
  நல்ல எண்ணங்களில் உள்ளதடா வாழ்க்கை!
- தோல்வியே இல்லாமல் இருப்பதற்குப் பெயர் வெற்றி அல்ல!
- விவாதம் செய்யாதே! அவ்வாறு விவாதம் செய்து அதில் நீ வெற்றி பெற்றால் ஒரு நண்பனை இழப்பாய்! அதில் நீ தோல்வியுற்றால் ஒரு எதிரியைப் பெறுவாய்!
- ஓடும் உதிரத்தில் தேடிப்பார்த்தாலும் சாதி தெரிவதில்லை!
- வார்த்தையை விட சிலவேளைகளில் மௌனமே சிறந்தது!

ந.போதநாயகி, வவுனியா.

## அன்பு காட்டுவோம்

இவ்வுலகம் அன்பு வழிப்பட்டது. அன்பு இன்றேல் இவ்வுலகம் என்றோ அழிந்திருக்கும். அன்பு மனிதனை தெய்வமாக்கும். தாய்க்குப் பிள்ளையிடம் அன்பு. பிள்ளைக்கு பொம்மையிடம் அன்பு. அன்புக்கு அடங்காதவர் இவ்வுலகில் யாரும் இல்லை. அன்புள்ளவர்களே மற்றவர்களுக்கு உதவி செய்வார்கள். எல்லோராலும் போற்றப்பட்டு பாராட்டப்படுவார்கள். பிறக்கும் போது எந்த மனிதனும் மகானாகப் பிறப்பதில்லை. அவன் வாழ்கின்ற வாழ்க்கைதான் அவனை மகானாக மாற்றுகின்றது. அன்புள்ளவர்கள் தாமும் வாழ்த்து மற்றவர்களையும் வாழ வைக்கின்றனர். மற்றவர்கள் எம்மீது அன்பு செலுத்தவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது போல் நாமும் மற்றவர்களிடம் அன்புள்ளவர்களாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஜே.முகமட் நப்லி ஷரீப், அட்டாளைச்சேனை. தே.பாட.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை வர்ண மேலாடை



வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவர்களும் அவர்களுடைய உதவியாளர்களும் பச்சை வர்ண மேலாடையை அணிந்திருப்பதைக் காணலாம். இவர்கள் ஏன் பச்சை வர்ணத்தில் அணியவேண்டும்? வேறு வர்ணங்களில் அணியக் கூடாதா? என்று உங்களில் பலரும் சிந்திக்கலாம். ஆனால், பச்சை வர்ணத்தில் மட்டுமே அணிய வேண்டும் என்பது நிபந்தனை. ஏனென்றால், அறுவை சிகிச்சையின்போது, குருதியின் சிவப்பு நிறத்தினிடையே, உடல் உறுப்புகளும் துல்லியமாகத் தெரிய ஒளி பிரதிபலிக்காமல் இருப்பது சிறந்தது. அந்த வகையில் பச்சை வர்ணமே அதற்கு உகந்த வர்ணமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிற வர்ணங்களில் இருந்து முற்றிலும் தனித்தன்மையுடன் வேறுபடுத்திக் காட்டக்கூடிய இரண்டு வர்ணங்கள் சிவப்பும் பச்சையும்தான். அதனாலேயே இவை இரண்டையும் போக்குவரத்து எச்சரிக்கை விளக்குகளுக்கும் பயன்படுத்துகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அங்.இல: 2987
எம்.அரஃபாத்,
தரம் - 9,
அல்-அஸ்ஹர் ம.கல்.,



அங்.இல: 2988
எம்.பாலில்,
தரம் - 7,
அல்-முபாரக் வித்.,
காலி.



அங்.இல: 2989
பி.அருள்செல்வன்,
தரம் - 11,
த.ம.ம.வித்.,
வவுனியா.



அங்.இல: 2990
ச.நிறோஜன்,
தரம் - 11,
வைத்தீஸ்வரா கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 2991
க.கலையரசு,
தரம் - 9,
கொஸ்லந்தை த.ம.வித்.,
பூனாகலை.



அங்.இல: 2992
எஃப்.சஃப்னா,
தரம் - 7,
கு/சுலைமானியா
ம.வித்., குரீகொடுவ.



அங்.இல: 2993
எஸ்.ஸாரங்கா,
தரம் - 6,
சைவப்பிரகாச ம.கல்.,
வவுனியா.



அங்.இல: 2994
க.ஜெந்தன்,
உயர் தரம்,
யோகபுரம் ம.வித்.,
மல்லாவி.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 2995
இ.றெக்ஸ்குயின்ரன்,
தரம் - 8,
சிலாவத்தை த.வித்.,
முல்லைத்தீவு.



அங்.இல: 2996
கு.வானதி,
தரம் - 11C,
அக்கராயன் ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல: 2997
ஏ.ஜாவிட்,
தரம் - 10A,
அல்-ஹம்றா ம.வித்.,
திருகோணமலை.



அங்.இல: 2998
எப்.பௌதான்,
தரம் - 7,
சுலைமானியா ம.கல்.,
கன்னத்தோட்டை.



அங்.இல: 2999
மனோஜ் குமார்,
தரம் - 9,
புனித சவேரியார் கல்.,
நுவரெலியா.



அங்.இல: 3000
ந.அகிலாஸ்,
தரம் - 6C,
புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல: 3001
எம்.இர்சாத்,
தரம் - 11A,
விபுலானந்தா கல்.,
திருகோணமலை.



அங்.இல: 3002
தி.கிறிஸ்டினா,
தரம் - 10C,
ஸ்ரீ சண்முகா இ.ம.கல்.,
திருகோணமலை.



அங்.இல: 3003
இ.டாணியல்,
தரம் - 11A,
சிவபாத கலையகம்,
கிளிநொச்சி.



அங்.இல: 3004
உ.ஏமணன்,
உயர் தரம்,
விக்னேஸ்வரா கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3005
எம்.சஹிர்கான்,
தரம் - 11A,
அல்-மனார் ம.கல்.,
கல்முனை.



அங்.இல: 3006
எம்.றிபாய்,
உயர் தரம்,
அல்-அஷ்ரக் தே.பாட.,
நிந்தவூர்-01.

## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 09.09.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 08
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | ரு | ந் | து | ■ | 2 கூ |
| யி | ■ | ■ | ■ | 3 வீ | டு |
| ல் | ■ | 4 பொ | ■ | ர | ■ |
| ■ | 5 ம | ன் | ன | ன் | ■ |
| ■ | ன | ■ | ■ | ■ | 6 நோ |
| 7 வா | ம் | ன | ■ | 8 நா | ய் |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 06 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
எம்.எம்.எப்.மிஷ்பா,
40, மீயல்ல, ஹக்மன்,
மாத்தறை.

**இரண்டாம் பரிசு**
த.மகிசா,
வலயம்-04,
F/8-22, வெண்கல
செட்டிக்குளம்,
வவுனியா.

**மூன்றாம் பரிசு**
ஜெ.ஜீணகா.
411/16, காலி வீதி,
கொழும்பு-04.

### ஆறுதல் பரிசுகள்

எம்.மயூரி.
36/7. பாபர் வீதி.
கொழும்பு-13.

யு.எஃப்.ஹஸ்னா,
2, சிங்கபுர வீதி,
சிலாபம்.

தி.கிந்துஜன்.
28, ஹரிங்டன் கொலனி,
கொட்டகலை.

எம்.எம்.முஹம்மட்.
77/3, தக்கியா வீதி,
மாவனல்ல.

எஸ். கிருஷாந்தி,
70, புறுக்சைட்
ஹல்கரனோயா,
ராகலை.

ஏ.அரீஜ்,
எ.பி.எம்.ஈர்ஃபான்,
ஆலிம் வீதி,
வாழைச்சேனை-05.

எஸ்.அஜித்குமார்.
தெஹியோவிட்ட
தோட்டம்,
தெஹியோவிட்ட.

எம்.எஸ்.எப்.சுமையா,
152/B, பாரி மன்ஸில்
பாடசாலை வீதி,
துடுவ, பெந்தோட்டை.

லோ.கோபிகா.
பிரதான வீதி,
திருக்கோவில்-03.

அஹமட் ஸாபி ஸமான்.
100, ஆராமயா பிளேஸ்,
கொழும்பு-09.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வீ | | 2 | | 3 | ■ |
| | ■ | து | ■ | | ■ |
| | ■ | ■ | 4 கா | | |
| 5 | | ■ | ■ | ப | ■ |
| ■ | ■ | 6 | 7 | ■ | 8 |
| ■ | ■ | ■ | 9 அ | | |

பெயர் : ..........
வீட்டு முகவரி : ..........
..........
தொலைபேசி இல : ..........
பாடசாலை : ..........
அருகிலுள்ள நகரம் : ..........
மாவட்டம் : ..........

### மேலிருந்து கீழ்

01. இது அளித்து உபசரிப்பது நம் பண்பு.
02. அமைதியான குணமுடையவரையும் இப்படிக் கூறுவர்.
03. வானில் பறக்கவிடுவது. (தலைகீழாக உள்ளது)
07. வெள்ளம் வரும்முன் கட்டப்பட வேண்டியது. (தலைகீழாக உள்ளது)
08. எலி பிடிக்கும் விலங்கு.

### இடமிருந்து வலம்

01. பயிர்ச்செய்கைத் தொழில்.
04. தோற்றம் என்றும் சொல்லலாம்.
05. ஆடையையும் குறிக்கும்.
06. வாத்தியக் கருவியொன்று.
09. இவரிடம் தூய அன்பைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு-14 ஐச் சேர்ந்த புஸ்பராஜ்-மாலதி தம்பதியரின் அன்பு மகன் சுஜீஸ்வரன், 31.08.2009 அன்று தனது பத்தாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் நலமாக வாழ வாழ்த்துகின்றனர்.



வியாங்கல்லையைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.நஸ்மி-றுஷானா நஸ்மி தம்பதியரின் செல்வப் புதல்வி நுஹா ஸைனம், 19.08.2009 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: எம்.மஃபூர்-வியாங்கல்லை)*

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## பட்டம் விடுவோம்



தா.ஐங்கரன், தரம் - 9B,
உடப்பு த.ம.வித்., உடப்பு.



அப்துர் ரஹ்மான் ரஷியா,
அறபா ம.வித்., உடுகொட.




எம்.ஆர்.எப்.இல்மா, தரம் - 9B,
வெலம்பொட மு.ம.வித்.,
வெலம்பொட.

## சந்தை



க.லுஜீவன், தரம் - 9A,
இந்து தே.கல்., மாத்தளை.

## வாழைமரம்




மு.மலர்செல்வி, தரம் - 7C,
கஹவத்தை நவோத்யா
த.ம.வித்., கஹவத்தை.




பாத்திமா சப்ரினா, தரம் - 6,
தி/அல்-பத்தாஹ் மு.ம.வித்.,
நிலாவெளி.

## யானைக்குட்டி




அ.தனுஷாலினி, தரம் - 2B,
பூண்டுலோயா த.ம.வித்.,
பூண்டுலோயா.




ஆர்.சியாம், தரம் - 3A,
விஜயரட்ணம் இ.ம.க.,
நீர்கொழும்பு.

## கத்தரிக்காய்



ஆர்.மங்கள ரஞ்சனி, தரம் - 5,
நு/லோகி த.வித்., தலவாக்கலை.



எஃப்.அஸ்னா பேகம்,
தரம் - 1B, தி/அல்-மினா ம.வித்.,
பூவரசந்தீவு.

## கைக்குட்டை



முஹம்மட் நஸீம், தரம் - 7S,
க/சித்திலெப்பை ம.வித்., கண்டி.



எம்.எம்.முபாஹிர், தரம் - 6A,
மடுள்போவ மு.ம.வித்.,
ஹெம்மாதகம.




புத்தளம், அஸன்குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியின்போது, இடம்பெற்ற சிறுமிகளின் தேகப்பயிற்சி நிகழ்வையே படத்தில் காண்கின்றீர்கள்.
*(படம்: ஏ.என்.எப்.நஹ்ஸத்-புத்தளம்)*




**கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு**



ட.தனுஷன், தரம் - 8A,
பது/பாரதி த.வித்.,
பதுளை.



எஃப்.நவ்சாட், தரம் 9A,
நூ/மெதடிஸ்ட் கல்.,
கந்தபளை.



பாத்திமா ஷகீகா,
தரம் - 6, கழுகமுவ ம.கல்.,
கழுகமுவ.



சைனப் நஸீர், தரம் - 2,
நூராணியா மு.ம.வித்.,
மாவனல்லை.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**முடிவுத்திகதி 18.09.2009**

**நொவெம்பர் மாதத்துக்கான தலைப்புகள்**

★ தரம் 1-5 - பட்டம் அல்லது மாம்பழம்
★ தரம் 6-8 - கூசா அல்லது ஆசிரியர்
★ தரம் 9-11 - சிரமதானம் அல்லது நெடுஞ்சாலையில் வாகனங்கள்

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் வறட்சியினால் அரிசி உற்பத்தி பாதிப்பு



இந்தியாவில் அநேகமான பிரதேசங்களில் வறட்சிநிலை நீடித்து வருவதனால் விவசாயத்திற்கு அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், அரிசி, சீனி ஆகியவற்றின் உற்பத்திகள் கணிசமான அளவில் குறைவடையக்கூடிய வாய்ப்பை இந்தியா எதிர்நோக்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உரிய காலப்பருவத்திற்குப் பெய்ய வேண்டிய மழை போதிய அளவில் பெய்யாததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இந்தியாவின் 10 மாநிலங்களைச் சேர்ந்த மொத்தம் 246 மாவட்டங்களில் மேற்படி வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் 99.15 தொன் அரிசியை இந்தியா உற்பத்தி செய்திருந்தது. எனினும், இம்முறை இதில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவே கருதப்படுவதால் இந்தியாவின் பொருளாதாரத்திலும் அது மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகின்றது.

# தாய்வான் அமைச்சர் பதவி விலகல்

தாய்வானில் சில வாரங்களுக்கு முன்னர் வீசிய 'மொரகொட்' சூறாவளியினால் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த மக்களுக்கு உரிய நிவாரண உதவிகளை செவ்வனே செய்ய முடியாமல் போனமைக்கான பொறுப்பைத் தானே ஏற்று அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் சென் சாவோசின் பதவி விலகியுள்ளார்.

ஓகஸ்ட் 8 ஆம் திகதி வீசிய இந்த சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாரிய சேதங்கள் ஏற்பட்டன. எனினும், இவற்றிற்கு உரிய வகையிலான நிவாரணங்களை மக்களுக்கு வழங்க முடியாமை குறித்து ஜனாதிபதியும் உயர்நிலை அதிகாரிகள் சிலரும் இணைந்து செய்தியாளர் மாநாடொன்றை நடத்தி மக்களுக்குத் தமது கவலையை தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நேபாளப் பிரதமரின் இந்திய விஜயம்

நேபாள நாட்டின் புதிய பிரதமரான மாதவ் குமார் கடந்த வாரம் இந்தியாவிற்கு ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.


கடந்த காலங்களில் நேபாளத்தில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு நிலை குறித்து இந்திய தலைவர்களுக்கு தெளிவுறுத்துவதுடன் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இவரது மேற்படி விஜயம் அமைந்திருந்தது.

கடந்த வருடம் எதிர்பாராத வகையில் நேபாளத்தில் மாவோவாதிகளின் ஆட்சி ஏற்பட்டதுடன், அந்த ஆட்சியின் பிரதமராக பிரசன்டா பதவியேற்றதையடுத்து அவர் தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக இந்தியாவிற்கு செல்லாமல் சீனாவிற்கே சென்றிருந்தார். இதன் காரணமாக இந்தியா, நேபாளம் உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. இவற்றைக் கருத்தில்கொண்டே தற்போதைய புதிய பிரதமர் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ஒபாமாவை பேட்டி கண்ட குட்டி ஊடகவியலாளன்



பதினொரு வயதே நிரம்பிய ஒரு சிறுவன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை தொலைக்காட்சியில் பேட்டி கண்டு உலகின் கவனத்தை ஈர்த்துள்ளான்.

சிறுவனின் பெயர் வீவர்கே. வயது 11. அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாநிலத்தில் கனின்ஹாம் என்ற பாடசாலையில் இவன் கல்விகற்று



வருகின்றான். இந்த பாடசாலையில் தகவல் தொடர்புப் பிரிவிற்கென தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் ஒன்றும் உள்ளது. இந்த தொலைக்காட்சி நிலையத்தில் ஓர் ஊடகவியலாளனாக இந்த சிறுவன் செயற்பட்டு வருகின்றான். எனவே, இந்த குட்டி ஊடகவியலாளன் சில தினங்களுக்கு முன்னர் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஒபாமாவை தொலைக்காட்சிக்கென நேர் (பேட்டி) கண்டான்.

அமெரிக்காவில் கல்வித்துறை வளர்ச்சியை மேம்படுத்த என்ன திட்டங்களை வைத்துள்ளீர்கள்? ஜனாதிபதி ஒருவரது கடமைகள் எவை? முன்னர்போல் இப்போதும் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றீர்களா? பாடசாலைக் காலங்களில் ஏற்பட்ட மறக்கமுடியாத நினைவுகள் எவை? போன்ற கோள்விகளை ஒபாமாவிடம் இந்த சிறுவன் கேட்டான். பத்து நிமிடங்கள் வரை நேர்காணல் நடைபெற்றது.

நேர்காணலின் இறுதியின்போது சிறுவன் வீவர்கே ஜனாதிபதி ஒபாமாவைப் பார்த்து, "நான் உங்களின் நண்பனாக முடியுமா?" என்று கேட்டான். அதற்கு இணக்கம் தெரிவித்த ஒபாமா சிறுவனுடன் கைகுலுக்கிக் கொண்டார். தனது கனவை நனவாக்கிய ஒபாமாவிற்கு சிறுவன் நன்றியைத் தெரிவிக்கவும் தவறவில்லை.

## அற்லஸ் கேள்வி - 219

**கேள்வி:** ஜனாதிபதி ஒபாமாவை பேட்டி கண்ட குட்டி ஊடகவியலாளனின் பெயர் என்ன?

சரியான விடை........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 219,**
**விஜய், த.பெ.எண் 2087, கொழும்பு.**

## போட்டி இல - 217 இன் சரியான விடை: ஃபேஸ்புக்

**பரிசு பெறுவோர்**

ஸபீகா ரஹீம்டீன்,
66, ஹரிசன் ஜோன்ஸ் வீதி, மாத்தளை.

எஸ்.ஜெரமி,
39/90, நெல்சன் ஒழுங்கை,
கொழும்பு-03.

நூருல் ஹாஃபியா,
411, புதிய வீதி, வெலிகம.

# கணினி வைரஸ்களை அழிக்கும் புதிய வழிமுறை அறிமுகம்



கணினியில் 'வைரஸ்' தாக்கம் ஏற்படுவது கணினி பாவனையாளர்களுக்கு தொடர்ந்து வருகின்ற ஒரு பாரிய பிரச்சினையாகும். இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனம் 'வைரஸ் எதிர்ப்பு வழிமுறையொன்றை அறிமுகம் செய்துள்ளது. தற்போதைக்கு இந்த வழிகளை அமெரிக்கா, சீனா, பிரேஸில், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கே வழங்கப்பட்டுள்ளதுடன், விரைவில் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, 'வைரஸ் எதிர்ப்பு' முறையை மைக்ரோசொஃப்ட் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். (www.microsoft.com/security essentials) இலவசமாக வழங்கப்படுகின்ற இந்த 'வைரஸ் எதிர்ப்பு' மென்பொருளின் சங்கேத அடையாளம் மொரோ (morro) என்பதாகும். இதன் பயன்பாடு அடையாளப் பெயர் மைக்ரோசொஃப்ட் செக்கியூரிட்டி எசென்ஷல்ஸ் (MSE- microsoft security essentials) என்பதாகும்.

இந்த 'வைரஸ் எதிர்ப்பு' நிரலை ஒரு தடவை கணினியில் தரவிரக்கம் செய்து கொண்டாலே போதுமாகும். அதன்பின்னர் அது இயல்பாகவே 'அப்டேட்' ஆகிக்கொண்டே இருக்கும். இதற்கு முன்னரும் 'வின்டோர்ஸ் வன்கெயார்' என்ற 'வைரஸ் எதிர்ப்பு' முறையொன்றை இதே நிறுவனம் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அது பாவனையாளர்களிடம் போதிய வரவேற்பைப் பெறாமையின் காரணத்தால் அதனை கைவிட்ட மைக்ரொசொஃப்ட் நிறுவனம் அதற்கு மாற்றீடாகவே குறித்த 'மொரோ' வைரஸ் எதிர்ப்பு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.



இலவச 'என்ட்டி வைரஸ்' வைரஸ் எதிர்ப்பு வழிமுறைகள் பல தற்போது நடைமுறையில் இருக்கின்றபோதிலும் அவை அனைத்தையும் மிஞ்சும் வகையில் பயனைக் கொண்டதாகவே மேற்படி மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் 'என்ட்டி வைரஸ்' வழிமுறை இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்திலும் வீட்டைச் சுத்தம் செய்யும் அக்காவுக்கும் தம்பிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

අක්කා: මල්ලි බිම පොල් කුඩු දමා අතුල්ලන්න.
மல்லி பிம பொல் குடு தமா அதுல்லன்ன.
அக்கா: தம்பி நிலத்தை தேங்காய்ப் பூ போட்டுத் தேயுங்கள்.

මල්ලි: පොල් කුඩු ඇයි අක්කේ?
பொல் குடு எய் அக்கே?
தம்பி: தேங்காய்ப் பூ ஏன் அக்கா?

අක්කා: පොල් කුඩුවලට කුණු යනවා.
பொல் குடுவளட குணு யனவா.
அக்கா: தேங்காய்ப் பூவுக்கு அழுக்குப் போகும்.

පොළොව දිළිසෙනවා.
பொளொவ திளிசெனவா.
நிலம் மினுமினுக்கும்.



මල්ලි: කොහේද තියෙන්නේ?
கொஹேத தியென்னே?
தம்பி: எங்கே இருக்கிறது?

අක්කා: පොල් කුඩු කුස්සියේ ඇති බලන්න.
பொல் குடு குஸ்ஸியே எதி பளன்ன.
அக்கா: தேங்காய்ப் பூ சமையலறையில் இருக்கும் பாருங்கள்.

මල්ලි: පොල් කුඩු ටිකයි තියෙන්නේ අක්කේ.
பொல் குடு டிகய் தியென்னே அக்கா.
தம்பி: தேங்காய்ப் பூ கொஞ்சம்தான் இருக்கிறது அக்கா.

අක්කා: ඒක සාලෙට ඇති.
ஏக சாலெட எதி.
அக்கா: அது வரவேற்பறைக்குப் போதும்.



මල්ලි: එතකොට බරාඳයට?
எதகொட பராந்தயட?
தம்பி: அப்போது விராந்தைக்கு?

අක්කා: බරාඳය පසුව අතුලන්න පුළුවන්.
பராந்தய பசுவ அதுலன்ன புளுவன்.
அக்கா: விராந்தையை பிறகு தேய்க்கலாம்.

මල්ලි මේ පුටුව උස්සල මෙහෙම තියන්න.
மள்ளி மே புடுவ உஸ்ஸலா மெஹெம தியன்ன.
தம்பி இந்தக் கதிரையைத் தூக்கி இப்படி வையுங்கள்.

මල්ලි: හොඳයි අක්කේ.
ஹொந்தய் அக்கே.
தம்பி: நல்லது அக்கா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: நிலம் மினுமினுக்கும்.
පොළොව දිළිසෙනවා.

i. தேங்காய்ப் பூ சமையலறையில் இருக்கிறது.
..........................................................................

ii. இந்தக் கதிரையைத் தூக்கி வையுங்கள்.
..........................................................................

iii. அது வரவேற்பறைக்குப் போதும்.
..........................................................................






இறந்தகால தனி வாக்கியங்களில் (**Past Simple Tense**) காணப்படுகின்ற 'வினா' (**Interrogative**) நிலை வாக்கியங்கள், 'உடன்பாடு' (**Affirmative**) நிலை வாக்கியங்கள் மற்றும் 'எதிர்மறை' நிலை (**Negative**) வாக்கியங்கள் ஆகிய மூன்றையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Did you come? (Interrogative)
நீ வந்தாயா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, I came. (Affirmative)
ஆம், நான் வந்தேன். (உடன்பாடு)

(இ) No, I didn't come. (Negative)
இல்லை, நான் வரவில்லை. (எதிர்மறை)

---

(அ) Did you come here?
நீ இங்கே வந்தாயா?

(ஆ) Yes, I came there.
ஆம், நான் அங்கே வந்தேன்.

(இ) No, I didn't come there.
இல்லை, நான் அங்கே வரவில்லை.

---

(அ) Did you come to my house?
நீ எனது வீட்டுக்கு வந்தாயா?

(ஆ) Yes, I came to your house.
ஆம், நான் உனது வீட்டுக்கு வந்தேன்.

(இ) No, I didn't come to your house.
இல்லை, நான் உனது வீட்டுக்கு வரவில்லை.

---

(அ) Did they go? (Interrogative)
அவர்கள் போனார்களா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, they went. (Affirmative)
ஆம், அவர்கள் போனார்கள். (உடன்பாடு)

(இ) No, they didn't go. (Negative)
இல்லை, அவர்கள் போகவில்லை. (எதிர்மறை)

---

(அ) Did they go to school?
அவர்கள் பாடசாலைக்குப் போனார்களா?

(ஆ) Yes, they went to school.
ஆம், அவர்கள் பாடசாலைக்குப் போனார்கள்.

(இ) No, they didn't go to school.
இல்லை, அவர்கள் பாடசாலைக்குப் போகவில்லை.

---

(அ) Did they go to school yesterday?
அவர்கள் நேற்று பாடசாலைக்குப் போனார்களா?

(ஆ) Yes, they went to school yesterday.
ஆம், அவர்கள் நேற்று பாடசாலைக்குப் போனார்கள்.

(இ) No, they didn't go to school yesterday.
இல்லை, அவர்கள் நேற்று பாடசாலைக்குப் போகவில்லை.

---

(அ) Did you meet the manager?
நீ முகாமையாளரை சந்தித்தாயா?

(ஆ) Yes, I met the manager.
ஆம், நான் முகாமையாளரை சந்தித்தேன்.

(இ) No, I didn't meet the manager.
இல்லை, நான் முகாமையாளரை சந்திக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாய் கூறிய தகவல்

முதியவர் காட்டுக்குச் சென்றார். எங்கே அவளை விட்டுவிட்டு வந்தாரோ அங்கே அவரது மகள் மிகவும் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் இருந்தாள். உயர்தர ரோம ஆடையணிந்து, ஆடம்பர நகைகளால் அலங்கரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அருகே விலையுயர்ந்த பரிசுகள் நிறைந்த பெரிய பெட்டி ஒன்றும் இருந்தது.

இதைப் பார்த்த முதியவர் பெருமகிழ்ச்சியுற்றார். தன் மகளை 'ஸ்லெட்ஜ்' வண்டியில் உட்கார வைத்து, அவளுக்கு அருகே பெட்டியை வைத்துக்கொண்டு வீட்டிற்கு ஓட்டிச் சென்றார். அப்போது, பணியாரங்களைச் சுட்டுக் கொண்டிருந்த மாற்றாந்தாய், திடீரென்று மேசைக்கு அடியில் நின்ற அவளது சிறிய நாய் சொல்வதைக் கேட்டாள்;

''லொள் லொள்!
கிழவனின் மகளோ மணமகள் ஆகிறாள்,
கிழவியின் மகளோ மணமின்றி வாடுகிறாள்!''

உடனே முதியவரின் இரண்டாவது மனைவி பணியாரம் ஒன்றை நாயிடம் வீசி எறிந்து கூறினாள், ''நீ சொல்வது தப்பு, நாயே! நீ இப்படிச் சொல்லவேண்டும். எனது மகளோ காதலில் வெற்றியடைவாள். கிழவனின் மகளோ செத்து மடிந்தாள்!''

நாய் பணியாரத்தைத் தின்றுவிட்டு, திரும்பவும் சொன்னது;

''லொள் லொள்!
கிழவனின் மகளோ மணமகள் ஆகிறாள்,
கிழவியின் மகளோ மணமின்றி வாடுகிறாள்''

அவள் மேலும் சில பணியாரங்களை நாயிடம் வீசினாள். எனினும், அது முன்னர் கூறியதையே மறுபடி கூறியதால் அதை அடித்தாள். ஆனால், நாயோ முன்னர் கூறியதையே மறுபடியும் கூறியது.

திடீரென்று படலை கிறீச்சிட்டது. கதவு திறக்க, விலையுயர்ந்த ரோம ஆடையணிந்து, ஆடம்பர நகைகளால் அலங்கரித்துக் கொண்டு முதியவரின் மூத்த மனைவியின் மகள் உள்ளே வந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னே அவளின் தந்தையாகிய முதியவர் விலையுயர்ந்த வெகுமதிகள் நிறைந்த பெரிய, கனத்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தார். அதைப் பார்த்த மாற்றாந்தாயின் வாய் அடைத்துப் போனது.



# உறைபனித் தாத்தா

ரஷ்ய நாட்டுக்கதை 02

உடனே அவள் குதிரையை 'ஸ்லெட்ஜ்' வண்டியில் பூட்டி ''என் மகளைக் காட்டிற்குக் கூட்டிப்போய் உமது மகளை விட்டுவிட்டு வந்த அதே இடத்தில் விட்டு விட்டு வா'' என்று தன் கணவனிடம் கூறினாள்.

முதியவரும் தனது இரண்டாவது மனைவியின் மகளை ஸ்லெட்ஜ் வண்டியில் ஏற்றி, அதே இடத்திற்கு அவளை அழைத்துச் சென்று உயரமான ஃபிர் மரத்திற்கு அடியில்

> **''எனது மகளை வெள்ளியாலும் தங்கத்தாலும் ஆடை அணிவித்து அழைத்து வா'' என்று கிழவி கூறியதும் முதியவரும் புறப்பட்டார்**

இருந்த பனித்திரளுக்குள் அவளைத் திணித்துவிட்டுத் திரும்பினார்.

அங்கே முதியவரின் இரண்டாவது மகள் உட்கார்ந்திருந்தாள். மிகவும் குளிராக இருக்கவே அவளது பற்கள் கடகடத்தன. விரைவிலேயே மரத்திற்கு மரம் தாவியவாறு உறைபனித் தாத்தா வந்தார். கிளைகளுக்கிடையே படாரென்ற சத்தம் கேட்டது. அப்பெண்ணைப் பார்த்த அவர்.

''வெதுவெதுப்பாக இருக்கிறாயா பெண்ணே?'' என்று கேட்டார்.

அவள் பதில் கூறினாள், ''இல்லை, இல்லை எனக்குப் பயங்கரமாகக் குளிர்கிறது. இந்த மாதிரிப் படபடவென்று ஓசை எழுப்பவேண்டாம் உறைபனித் தாத்தாவே''

உறைபனித் தாத்தா கீழே இறங்கி வந்தார். படாரென்ற சப்தம் முன்னிலும் பலமாகக் கேட்டது. குளிர் அதிகமாகியது.

''வெதுவெதுப்பாக இருக்கிறாயா பெண்ணே?'' எனக் கேட்டார்.

அவள் பதிலளித்தாள், ''இல்லை இல்லை, என் கைகளும் கால்களும் உறைந்து போய்விட்டன'' உறைபனித் தாத்தா இன்னும் கீழே இறங்கிவந்தார். மேலும் உரக்கப் படபட என்று ஓசை ஏற்பட்டது குளிர் மிக அதிகமாகியது.

''வெதுவெதுப்பாக இருக்கிறாயா பெண்ணே?'' என்று திரும்பவும் கேட்டார் உறைபனித் தாத்தா.

''இல்லை.. இல்லை. நான் உறைந்து போய்விட்டேன் கிழட்டு உறைபனியே செத்து ஒழி'' என்று கத்தினாள்.

இந்த வார்த்தைகளால் உறைபனித் தாத்தா மிகவும் கோபமடைந்து, மிக மிக அதிகமாக குளிர் ஏற்படும்படி செய்தார். இதனால், பனியில் உறைந்துபோய் அவள் இறந்துவிட்டாள்.

விடியும் முன் முதியவரின் இரண்டாவது மனைவி தன் கணவனிடம் கூறினாள், ''சீக்கிரம் குதிரையை 'ஸ்லெட்ஜ்' வண்டியில் பூட்டிச் சென்று, எனது மகளை வெள்ளியாலும் தங்கத்தாலும் ஆடை அணிவித்து அழைத்து வா'' என்று கிழவி கூறியதும் முதியவரும் புறப்பட்டார். அப்பொழுது மேசைக்குக் கீழாக நின்ற நாய் கூறியது;

''லொள் லொள்!
கிழவனின் மகளோ மணமகள் ஆகிறாள்,
கிழவியின் மகளோ செத்து மடிகிறாள்!''

உடனே அவள் பலகாரம் ஒன்றை நாயிடம் வீசியெறிந்து கூறினாள் ''நீ சொல்வது தப்பு, நாயே! நீ இப்படிச் சொல்லவேண்டும். 'எனது மகள் மணமகள் ஆகிறாள்...''

ஆனால், நாயோ முன்னர் சொன்னதையே திரும்பவும் சொன்னது

''லொள் லொள்!
கிழவனின் மகளோ மணமகள் ஆகிறாள்,
கிழவியின் மகளோ செத்து மடிகிறாள்!''

அந்த நேரத்தில் படலை கிறீச்சிட, முதியவர் தனது 'ஸ்லெட்ஜ்' வண்டியில் உள்ளே வந்தார். தன் மகளைச் சந்திப்பதற்காக முதியவரின் இரண்டாவது மனைவி வீட்டின் வெளியே விரைந்தாள். 'ஸ்லெட்ஜ்'வண்டியில் உள்ள மரப்பட்டை மூடியைத் திறந்து பார்த்தாள். அங்கே அந்த 'ஸ்லெட்ஜ்' வண்டியில் அவளது மகள் இறந்து கிடந்தாள்.

அவள் கதறி அழுதாள், ஆனால் அதற்குள் எல்லாமே முடிந்திருந்தது.

*(அடுத்த இதழில் 'சிறுமியும் அன்னப்பறவைகளும்' ஆரம்பமாகிறது)*

# அரசனின் முட்டாள்தனம்

வெகு நாட்களுக்கு முன் ஆனந்தபுரி என்ற நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு அழகான ஒரு மகள் இருந்தாள். அவளுடைய பேரழகைக் கேள்விப்பட்டு பல நாட்டு இளவரசர்களும் அவளைத் திருமணம் செய்து கொள்ள முன் வந்தனர். அரசன் தன் மகளான இளவரசியைத் திருமணம் முடிக்க விரும்பியவர்களுக்கு ஒரு நிபந்தனை விதித்தான். அந்த நிபந்தனையானது, ''எந்த இளவரசன் ஒரு முடிவில்லாத கதையைச் சொல்கிறானோ அவனுக்கே என் மகளை மணம் முடித்துவைப்பேன் என்பதாகும். அத்துடன், அவ்வாறு கதை சொல்ல முடியாமல் தோறப வர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்படும்'' என்று அறிவித்தான்.



அரசனின் முட்டாள்தனமான இக்கோரிக்கையை ஏற்று போட்டிக்கு வந்த பல இளவரசர்கள் தங்கள் உயிரைப் பறி கொடுத்தனர். ஒரு நாள் ஒரு ஏழை இளைஞன் அரசனிடம் வந்தான். தான் இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவதாகக் கூறினான். அரசனும் சம்மதம் தெரிவித்தான். ஏழை இளைஞன் கதை சொல்ல ஆரம்பித்தான். ஒருவன் மிகப் பரந்த பல ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் ஒரு பெரிய பண்டகசாலையை கட்டி முடித்தான். பண்டகசாலை வானை முட்டும் அளவிற்கு உயர்ந்திருந்தது. அந்தப் பண்டகசாலை முழுவதும் தானியத்தை நிரப்பி வைத்தான். பண்டகசாலையின் உச்சியில் ஒரு சிறிய துவாரம் இருந்தது. அதன் வழியாக ஒரு புழு ஒரு தானியத்தை வெளியே எடுத்து வந்தது. இப்படி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தானியத்தை புழு எடுத்து வந்தது என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனான். அரசன் இதைக் கேட்டு சலித்துப் போனான்.

இதனால், வேறு வழியின்றி முடிவில்லாத இக்கதையைச் சொன்ன அந்த இளைஞனுக்கு அரசன் தன் மகளைத் திருமணம் செய்து வைத்தான். தன்னுடைய முட்டாள்தனமான போட்டியினால் இளவரசர்களை மணக்க வேண்டிய இளவரசி ஒரு சாதாரண வாலிபனை மணக்க வேண்டியதாயிற்றே... என்று எண்ணி அரசன் மிகவும் மனம் வருந்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் உசேன் போல்ட் உலக சாதனை!




ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெற்ற உலக மெய்வல்லுனர் போட்டிகளில் 200 மீற்றர் போட்டியில் ஜெமெய்க்காவின் உசேன் போல்ட் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

200 மீற்றரை 19.19 செக்கன்களில் ஓடி முடித்தே உசேன் போல்ட் இந்த சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இரண்டாவது இடத்தை பனாவின் எலன்லேபா எட்வர்ட் பெற்றதுடன், மூன்றாவது இடத்தை அமெரிக்காவின் வெல்லஸ் ஸ்பியர்மன் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. தனது இந்த சாதனையைப் பற்றி கருத்துத் தெரிவித்துள்ள உசேன் போல்ட், ''நான் எனது ஆரம்பத்தை சரியாக ஆரம்பித்தேன். அதுதான் எனது வெற்றியின் திறவுகோளாக அமைந்தது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே 100 மீற்றர் போட்டிகளில் சாதனை படைத்திருந்த போல்ட் 200 மீற்றர் போட்டிகளில் சாதனை படைப்பதே தனது அடுத்த குறிக்கோள் என்று முன்னரே தெரிவித்திருந்தார். அவர் கூறியதைப் போலவே 200 மீற்றர் போட்டிகளில் உலக சாதனையையும் நிகழ்த்தி தன்னம்பிக்கையை நிரூபித்துவிட்டார்.

இதேவேளை, மேற்படி உலக மெய்வல்லுனர் போட்டியில் முன்னதாக நடைபெற்ற 100 மீற்றர் போட்டியிலும் உசேன் போல்ட் மீண்டும் தனது முன்னைய சாதனையை புதுப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி, 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 9.58 செக்கன்களில் ஓடி தனக்கே உரிய முன்னைய சாதனையை புதுப்பித்துள்ள உசேன் போல்ட்டுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை அமெரிக்காவின் டைசன்கே மெஹி பெற்றதுடன் மூன்றாவது இடத்தை ஜெமெய்க்காவின் அஸாஃபா பவெல் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வந்தாறுமூலை வித்தியாலயம் தேசிய விளையாட்டு பாடசாலையாக தரமுயர்வு

மட்டக்களப்பு, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தை கிழக்கு மாகாணத்தின் தேசிய விளையாட்டு பாடசாலையாக மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விளையாட்டுத்துறை அமைச்சர் மேற்கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் கீழ் தேசிய விளையாட்டுப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ள வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் 400 மீற்றர் ஓடுபாதையும், புதியதாக பார்வையாளர் அரங்கொன்றும் அமைக்கப்படவுள்ளதுடன் மேலும், பல புதிய வசதிகளும் அடங்கிய கட்டடமொன்றும் 20 மில்லியன் செலவில் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமன்றி, இப்பாடசாலையில் மாணவர்கள் 100 பேர் அளவில் தங்கக்கூடிய வசதிகளுடனான தங்குமிடமும் நீச்சல் தடாகமும் அமைக்கப்படவுள்ளதுடன் வொலிபோள், வலைப்பந்து, கால்பந்து ஆகிய பல விளையாட்டுக்களை மேற்கொள்வதற்காக அரங்க வசதிகளும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிய-சார்க் கெரம் போட்டிகள்

**இந்தியாவில் நடைபெற்ற மூன்றாவது ஆசிய கெரம் போட்டிகளிலும் 13 ஆவது சார்க் கெரம் போட்டிகளிலும் இந்திய கெரம் அணியே செம்பியனாகியதுடன் இலங்கை அணி இரண்டாவது இடத்தைப் பெற்றது.**

***சார்க் கெரம் போட்டிகள் மும்பாய் நகரிலும் ஆசிய கெரம் போட்டிகள் பூனே நகரிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், மாலைதீவு, இலங்கை உட்பட ஆறு ஆசிய நாடுகள் கலந்து கொண்டன.***

***இந்திய அணியினரே உலக கெரம் செம்பியன்கள் என்று கூறப்படுகின்றபோதிலும் கடந்த வருடம் பிரான்ஸில் நடைபெற்ற உலக கெரம் செம்பியன் போட்டிகளில் இந்தியாவை இலங்கை தோற்கடித்து செம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தமையும் குறிப்பிடத்தக்கது.***



## ஒலிம்பிக்கில் மகளிர் குத்துச்சண்டை



ஒலிம்பிக் போட்டிகளில் மகளிர் குத்துச்சண்டை போட்டிகளையும் இடம்பெறச் செய்வதற்கு சர்வதேச ஒலிம்பிக் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கமைய, 2012 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் தொடக்கம் இனிவரும் ஒலிம்பிக் போட்டிகளில் மகளிர் குத்துச் சண்டைப் போட்டிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிராவிட் மீள்வருகை



இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான ராகுல் டிராவிட் மீண்டும் இந்திய அணியில் இடம் பெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள முக்கோண கிரிக்கெட் போட்டிகள் மற்றும் தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள செம்பியன் கிண்ணப் போட்டிகள் ஆகியவற்றில் இந்திய அணியின் சார்பில் டிராவிட் இடம்பெற்றுள்ளார்.

கடந்த காலப்போட்டிகள் பலவற்றில் டிராவிட் சிறப்பாக விளையாடாததன் காரணமாக இந்திய அணியில் அவருக்கு அண்மைக்காலமாக வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. எனினும், இந்திய அணியைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர்கள் பலர் உபாதைகளின் காரணமாக அணியில் இடம்பெறாத நிலையிலேயே அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக டிராவிட் மீண்டும் இந்திய அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்சாரத்தை சேமிப்போம்

### போட்டி இல - 03

### தலா ரூ.1,000 பணப்பரிசை வெல்லும் வாசகர்கள் வருமாறு;

என்.எம்.சாரான், 07, பதுளை வீதி, ஹாலி-எல.
எஸ்.கிருஷாந்தி,
70, புருக்சைட், ஹால்கரனோயா, ராகலை.
எம்.டி.முர்சிதா,
95/26, ஜயந்திபுர, போகமடித்த, ஹாலி-எல.
எம்.மாதங்கி, 227, இரண்டாம் குறுக்கு வீதி, வவுனியா.
ஏ.தர்மினி, 16, வின்ட்சர் எவென்யூ,
வென்டவர்ட் பிளேஸ், தெஹிவளை.
நுஸ்ரத் ஃபாவின்,
15, சம்சம் மாவத்தை, மரிக்கார் வீதி, தர்கா நகர்.
டீ.நலன்ராஜ், கெந்தகொல்ல, தெல்பெத்த, பதுளை.
என்.ஸஹீமா, 68, மீயல்ல, மாத்தறை.
ஆர்.ஜே.லலிதா,232, பலஹாரகொட,எட்டியாந்தோட்டை.
எஸ்.நிலானி, மாரியம்மன் கோவில் வீதி,
ஆரையம்பதி-02, மட்டக்களப்பு.
சந்தருவன், வெளிபார, தலவதுகொட.
ஏ.ஹிமல்க, 03, ரதவான வீதி, கிரிந்திவெல.
எம்.ஷஷிகலா, மகா புத்கமுவ, அங்கொட.
சவிந்த, 610/16, 2 வது கபடாவத்த, ஹோமாகம.
உதார, உவித, வலஸ்முல்ல.
சங்கீதா, 241/2, எதடுவாவ, பேராதெனிய.
எம்.தீபிகா, குருவிதென்ன, மஹியங்கனை.
ஏ.திமுது, நவகம, மிடியாகொட.
விராஜ், கெவிடியாகலை, பொல்கம்பளை.
தில்ஷான், போதிமலுவ, பரகடுவ.
அனுஷா, மிருப்ப, மாரஸ்ஸன.
சந்துனி ப்ரபாஸ்வரி, ரிகில்லகஸ்கட.
பி.சத்துரிகா,123, நிகலொய வீதி, மாத்தளை.
டீ.மதுஷானி, தொல இகல, நவதகல.
கே.நிஷானி, எம் 1/84, மீயனவிட, தெரணியாகல.
திஸாநாயக, லத்பந்துரு, தெஹியத்தகண்டிய.
டீ.துலாஞ்சலி, கெலியல்பிடிய, பேராதெனிய.
ஹர்ஷன, கடவெத்துவ, மாத்தறை.
பீ.ப்ரகீத், 47 சி, விஹிரியாகம.
ஹங்சிகா, விஜய மாவத்தை, எல்பிடிய.
கிமிஹானி, மகாவல்தென்ன, பலாங்கொடை.
எஸ்.பிமல்ஷ, 112/ஏ, தலவில, தலவில ஆலயம்.
ஆஞ்சலா, கெடிகும்புர, கடுகன்னாவ.
ஐ.மதுமாலி, மகரவெல, உடிஸ்பத்துவ.
டி.பியூமி, கொடலந்த, ஹொரண.
மதுஷானி, எம்பலியத்த, ஹங்குரன்கெத.
ப்ரியங்கிகா, திசர, திஹகொட.
கிருஷான், வலகந்துவ, காலி,
ப்ரமோத்யா, கபுஹெம்பளை, அக்மன.
ரேணுகா, தல்பிடியக, வாதுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக் குடும்பத்தினர்


சிறுத்தை

காட்டு மிருகங்களில் எமக்குப் பெரிதும் அச்சத்தை ஊட்டும் மிருகங்கள் சிலவும் உள்ளன. அவற்றுள் சிங்கம், சிறுத்தை, புலி என்பன முக்கியமானவை. காடுகளை தமது ராசதானியாக அமைத்துக்கொண்டு, வாழ்க்கை நடத்தும் இம்மிருகங்கள் அனைத்தும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். பூனைக் குடும்ப அங்கத்தவர்கள் உலகம் முழுவதும் பரவி வாழ்கின்றன. எனினும் நாம் இவ்விதழினூடாக இலங்கையில் வாழும் பூனைக் குடும்ப அங்கத்தவர்களைப் பற்றி சற்று நோக்குவோம்.

## பொதுவான இயல்புகள்

பூனைக் குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் முலையூட்டிகளாகும். உடல் அளவிலும் தோற்றத்திலும் நிறத்திலும் ஒன்றோடொன்று வேறுபட்டிருந்தாலும், இவற்றின் வாழ்க்கை முறைகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று இணைந்ததாகவே காணப்படுகின்றன. இவை அதிகம் கேட்கும் திறனைக் கொண்டிருக்கின்றன. கூர்மையான பார்வையும் இவற்றுக்கு உண்டு. இரைகளை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும் விதத்தில் கால்களில் நீளமான கோர நகங்கள் காணப்படுகின்றன. அவ்வாறே, இறைச்சியைக் கீறிக்கிழித்து உண்பதற்கு வசதியாக மிகவும் உறுதியானதும் நீளமானதும் கூரானதுமான பற்களும் இவற்றுக்கு உள்ளன. இவற்றின் உடல் முழுவதும் அடர்த்தியான ரோமங்களால் மூடப்பட்டிருக்கும்.

பூனைக் குடும்பத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல மிருகங்களும் வேட்டையாடி மிருகங்களைப் பிடிப்பதில் மிகவும் திறமை வாய்ந்தன. இவை பகல் வேளையிலும் இரவு வேளையிலும் வேட்டையாடுகின்றன. மிருகமொன்றை வேட்டையாடும்பொழுது, தரையில் தன்னைத் தாழ்த்தியவாறு பதுங்கியிருந்துகொண்டு மெல்ல மெல்ல இரையை நோக்கி நகரும். பின்னர் வேகமாக ஓடிச்சென்று லாவகமாக இரையைப் பிடித்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது.

இவற்றில் சிங்கம் எப்போதும் பெருங் கூட்டமாகத் திரிவதற்கே விரும்புகின்றது. ஏனைய மிருகங்களோ தாம் இருக்கும் பிரதேசத்தின் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டு தனியாக வாழவே விரும்புகின்றன. பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த மிருகங்களில் பெரிய உடல் அமைப்பைக்கொண்ட மிருகங்கள், இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கொரு முறை குட்டிகளை ஈனுகின்றன. அத்துடன், சிறிய உடலமைப்புடைய மிருகங்கள் பொதுவாக வருடமொன்றிற்கு இருமுறைகளுக்கு குட்டிகளை ஈனுகின்றன.

## இலங்கையிலுள்ள பூனைக் குடும்ப அங்கத்தவர்கள்

சிங்கம், சிறுத்தை, புலி உட்பட உலகெங்கிலும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த 36 வகையான மிருகங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. எனினும், இலங்கையில் இவற்றில் நான்கு வகைகள் மாத்திரமே இருக்கின்றன. அவையாவன; சிறுத்தை, காட்டுப் பூனை, பச்சைப் பூனை, நாட்டுப் பூனை/ சந்தனப் புலி என்பனவாகும்.

## சிறுத்தை

இலங்கையில் வாழும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த மிகப்பெரிய உறுப்பினர் சிறுத்தையாகும். பெரும்பாலானோர் இலங்கைச் சிறுத்தையை 'புலி' என்றே அழைக்கின்றனர். எனினும், 'புலி' மற்றும் 'சிறுத்தை' என்பன ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு மிருகங்களாகும். சிறுத்தை செம்மஞ்சள் நிறம் கலந்த கபில நிறத்துடன்கூடிய தோலைக் கொண்டிருக்கும். தோலின் மேற்பகுதியில் ஆங்காங்கே கடும் கபில நிறமும் கறுப்பும் கலந்த புள்ளிகள் காணப்படுகின்றன. பொதுவாக 40 முதல் 60 கி.கிராம் வரையிலான உடல் நிறையைக்கொண்டது. இரவு வேளைகளிலேயே இதன் நடமாட்டம் இருக்கும். குரங்குகள், காட்டுப்பன்றிகள், மான்கள், மரைகள் போன்ற மிருகங்களை வேட்டையாடி இரையாக்கிக்கொள்ளும். இரையை மறைத்து வைத்து அவை அழுகிய பின்னர் உணவாகக் கொள்வதில் இதற்கு அலாதிப் பிரியம். தனியாக அலைந்து திரிவதை அதிகம் விரும்பும் இச்சிறுத்தைகளை இலங்கைக் காடுகளில் அதிகம் காணலாம்.

## பச்சைப் பூனை

நீர்நிலைகளை அண்டி வாழும் ஒரு மிருகமாகும். நமது வீடுகளில் வளர்க்கும் சாதாரண பூனையைவிட உடல் அளவில் இருமடங்கு பெரியது. இளம் கபிலம் அல்லது சாம்பல் நிறத்தோலைக் கொண்டது. தோலின் மேற்பரப்பில் நீள்வட்ட வடிவ கரும்புள்ளிகள் காணப்படும். மயிர்கள் இருதட்டுக்களாக சருமத்தை மூடியிருக்கும். இதன் கால்கள் நீளமானவை. நகங்களில் கருங்கோடுகள் காணப்படும். இவற்றின் பிரதான உணவு மீன்களாகும். இதுதவிர, நீர்நிலைச் சூழலில் வாழ்கின்ற தவளைகள், நண்டுகள், ஊர்வன வகைகள், ஓணான் போன்றவையும் இதன் உணவுகளாகும். பொதுவாக இலங்கையிலுள்ள எல்லாக் காடுகளிலும் இவை உயிர் வாழ்கின்றன. நகரங்களுக்கு அண்மையிலும் இதனைக் காணலாம்.

## காட்டுப் பூனை

காட்டுப் பூனை பச்சைப் பூனையைவிட உருவத்தில் சிறியது. சாதாரணமாக வீடுகளில் வளர்க்கப்படும் பூனையின் உடல் அளவைக்கொண்டது.இதன் தோல் கபில நிறம் அல்லது மஞ்சள் நிறத்தில் காணப்படும். முகத்திலும் கால்களிலும் மட்டும் இளம் கபில நிறப் புள்ளிகள் காணப்படுகின்றன.வாலின் நுனிப்பகுதியில் கறுப்பு நிறப் புள்ளிகள் உள்ளன.காட்டுக்கோழி,எலி, முயல் போன்ற உயிரினங்களை உணவாக உட்கொள்ளும். இந்த வகைப் பூனைகளுக்கு அவற்றின் இரையை நோக்கி மிக வேகமாகப் பாயமுடியும்.இது பகலிலேயே இரை தேடும்.தாழ்நில உலர் வலயத்தில் உள்ள புதர்கள் நிறைந்த புற்றரையிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் இப்பூனைகள் வாழ்கின்றன.

## நாட்டுப் பூனை

இலங்கையில் வாழும் பூனைக் குடும்ப அங்கத்தவர்களில் உருவத்தில் மிகச் சிறியது இந்த நாட்டுப் பூனை இனமாகும். இவ்வினம் அடர்ந்த காடுகளிலேயே வாழ்கின்றது. இதன் உடல் அளவு நாம் வீடுகளில் வளர்க்கும் பூனையின் அளவுக்குச் சமனானது. நாட்டுப் பூனையை அபசகுணமாகவே பெரும்பாலானோர் கருதுகின்றனர். அதன் உடல் நீளத்தில் சரி பாதியாக அதன் வால் காணப்படுகின்றது. தோல் சாம்பல் நிறமானது. தோலின் மேற்பரப்பில் செங்கபில நிறப் புள்ளிகள் காணப்படுகின்றன. உடலின் அடிப் பகுதி வெள்ளை நிறமானது. வண்டுகள், பூச்சிகள், சிறு பறவைகள், ஓணான் போன்ற உயிரினங்களை உணவாக உட்கொள்ளும். இரவு வேளைகளிலேயே இதன் நடமாட்டத்தை அதிகம் காணலாம்.

## பாதுகாக்கப்பட வேண்டிய குடும்பம்

பூனைக் குடும்ப உறுப்பினர்கள் பெரும்பாலும் ஊன் உண்ணிகளாகவே காணப்படுகின்றன. இதனால் சூழல் கட்டமைப்பின் சமநிலையைப் பாதுகாப்பதற்கு இத்தகைய மிருகங்களின் இருப்பு அத்தியாவசியமானது.சூழலில் வாழும் ஏனைய மிருகங்களின் இனப்பெருக்கத்தை அவை கட்டுப்படுத்துகின்றமையே அதற்கான காரணமாகும். எனினும், காடுகளுக்குத் தீ மூட்டுவதன் மூலம் இவற்றின் இருப்பிடம் அழிந்து போவதும் இவற்றின் தோலுக்காக வேட்டையாடப்படுவதும் இம்மிருகங்களின் அழிவுக்கு முக்கிய காரணங்களாக விளங்குகின்றன.

## பூனைக் குடும்பத்தின் விபரம்

| | |
|---|---|
| வம்சம் | - Chordata |
| வர்க்கம் | - Mammalia |
| கோத்திரம் | - Carnivora |
| குலம் | - Felidae |

-இரஞ்சித் ஜெயகர்


நாட்டுப் பூனை

காட்டுப் பூனை

பச்சைப் பூனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கணக்குப் புதிர் — 5

ஒரு பெட்டியில் 10 வெள்ளைப் பந்துகளும் 10 பச்சைப் பந்துகளும் உள்ளன. இன்னொரு பெட்டியிலும் இதேமாதிரி 10 வெள்ளைப் பந்துகளும் 10 பச்சைப் பந்துகளும் உள்ளன. ஒரு பெட்டியில் ஒரே நிறமுடைய பந்துகளே இருக்க வேண்டுமாயின், எத்தனை பந்துகள் இடம் மாறவேண்டும்?

..........................




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.09.09 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 224
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## அறிவுக்கு விருந்து 221 விடைகள்

**போட்டி: 03**

✱ ஆழம்புத்தூர் எனும் சிற்றூரில் ஒரு பாட்டியும் பாலன் எனும் சிறுவனும் வசித்து வந்தார்கள். பாட்டி பாலன் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். பாலனும் பாட்டி மீது மரியாதை வைத்திருந்த தோடு, பாட்டி சொற்படி நடப்பவனாகவும் திகழ்ந்தான். ஆனால், பாலன் மிகுந்த கோபக்காரன். ஒருநாள் பாலனைப் பார்த்து நிமலனும் கமலனும் கிண்டல் செய்தார்கள். பாலனின் கோபக் குணம் பற்றி இவர்களுக்குத் தெரியாது. அப்போது கோபமடைந்த பாலன் அவர்களைப் பிடித்துச் சிறிய குட்டையொன்றுக்குள் தள்ளி விட்டான். அவர்கள் இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். இதனை அறிந்த நிமலனதும் கமலனதும் பெற்றோர் பாலனைப் பற்றி அவனது பாட்டியிடம் முறையிட்டனர். பாட்டி தனது பேரனை அழைத்து அவர்களிடம் மன்னிப்புக்கோரும்படி கூறினார். அத்துடன், நிமலனும் கமலனும் தேவையின்றி தனது பேரனைக் கிண்டல் செய்ததனை அடுத்தே அவன் இவ்வாறு நடந்து கொண்டான். ஆகவே, அவர்களைக் கண்டிக்குமாறு அவர்களது பெற்றோருக்கு பாட்டி கூறினார்.

**போட்டி: 04**

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 02. mom | 01. visit |
| 05. gift | 03. kisses |
| 07. hugs | 04. thank |
| 08. spring | 06. card |
| 09. flowers | |

**போட்டி: 05**

ஏறுவரிசையில் எழுதுதல்

1. XXXV, XCIII, CCXII, CCCXXIV, MXVIII.
2. XVIII, XXVIII, XLVII, LXIII, DXXXII.
3. LXXXIV, CXXXVII, DCCXV, MMDCXXXIV.

ரோமன் இலக்கத்தில் எழுதுதல்

1. 427 - CDXXVII
2. 805 - DCCCV
3. 99 - XCIX
4. 38 - XXXVIII
5. 1005 - MV

### இலக்கங்களை முறையே இணையுங்கள் — 2




### அற்லஸ் அறிவுக்கு விருந்து 221 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ச.சசிந்தன், தரம் - 6A,
யூனிற்-16 பாடசாலை, வவுனியா.

**போட்டி: 02**
எம்.ரிஹாம், தரம் - 5B,
ஜீலான் ம.கல்., பாணந்துறை.

**போட்டி: 03**
பா.றிப்கா, தரம் - 11B,
மீரா பாலிகா ம.வித்., காத்தான்குடி-06.

**போட்டி: 04**
ம.ஷாரணியா, தரம் - 9V,
வாழைச்சேனை இ.கல்., வாழைச்சேனை.

**போட்டி: 05**
எஃப்.றிஸ்னா, தரம் - 12,
சாஹிரா தே.கல்., கம்பளை.

### கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை கட்டத்தினுள் இனங்கண்டு நிறந்தீட்டுங்கள். — 3

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| e | e | e | t | e | w | f | k | s | a | n | d |
| a | b | o | o | k | k | i | s | a | b | n | o |
| k | s | n | w | r | t | s | u | n | c | a | n |
| l | b | b | e | a | c | h | s | d | g | e | k |
| g | d | o | l | c | a | a | l | c | u | a | e |
| c | a | i | b | a | f | b | o | a | t | e | y |
| e | a | l | e | r | f | a | c | s | a | t | b |
| s | e | a | e | a | k | g | s | t | t | b | n |
| p | i | c | n | i | c | a | c | l | b | a | a |
| a | r | r | k | n | i | s | h | e | l | l | s |
| d | a | a | l | h | l | s | a | t | c | l | d |
| e | b | b | u | c | k | e | t | n | c | a | a |

crab
fish
rain
sand

beach
spade
towel

bucket
donkey
picnic
shells

உதாரணம்: bag

bag
hat
sun

ball
boat
book

sandcastle

### பொருத்தமான சொல்லை எழுதி, பழமொழிகளைப் பூர்த்தி செய்க — 1

1. அருமையற்ற வீட்டில் ................................ குடியிருக்காது.
   (எருமையும்/வறுமையும்/யாரும்)


2. கடித்த ......................... கனிந்த சொல்லே ................................
   (பாம்பிலும்/தூய்மை/நன்மை/சொல்லினும்)

3. ......................... உள்ள வரையில் ......................... கொள்ளாத கவலை.
   (விண்/கடல்/யார்/உடல்)

4. தவிட்டுக்கு வந்த கை ......................... வரும்.
   (அரிசிக்கும்/தங்கத்துக்கும்/பணத்துக்கும்)

5. ............................. கெடுவதும் வாயினால்தான்.
   (சாவதும்/ உயர்வதும்/ வாழ்வதும்)

### சரியான உருவை அமைக்க — 4



### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளுக்கு நம்பிக்கையூட்டும் மூங்கில் பாடசாலை









வறிய நாடான நேபாளத்தில் கல்வி பெற வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்காக மூங்கில் பாடசாலைகளை அமைக்கும் திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறார் பொதுநல விரும்பியொருவர்.

உத்தம் சஞ்சேல் என்னும் இவர் ஒரு முன்னாள் பொலிவூட் நடிகராவார். வீதிகளில் அலைந்து திரியும் அநாதைச் சிறுவர்கள் மீது இரக்கம் கொண்டு 1990 களில் இப்படியொரு நடவடிக்கையை மேற்கொண்டார். காத்மண்டுவைச் சேர்ந்த 35 வயதுடைய இவர் கல்விபெற வசதியற்றிருக்கும் அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி வழங்குவதை லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார். இவரின் முயற்சியால் கடந்த ஒன்பது வருடகாலத்தில் நாடு முழுவதும் இத்தகைய மூங்கில் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கல்விகற்க மாதாந்தம் மிகச்சிறிய தொகையொன்றை வழங்கவேண்டும்.

மூங்கில் பாடசாலைகள் என்று கூறப்படும் இப்பாடசாலைகள் செலவு குறைந்த பொருட்களைக் கொண்டு நிர்மாணிக்கப்படுகின்றன. இவற்றை நிர்மாணிப்பதற்காக உள்ளூர் வர்த்தகர்களும் தர்மஸ்தாபனங்களும் நன்கொடைகளை வழங்குகின்றன. மூங்கிலால் குறைந்த செலவிலான பொருட்களைக் கொண்டு இப்பாடசாலைகளை நிர்மாணிப்பதால் நிர்மாணச் செலவு 60 சதவீதமாகக் குறைகின்றதாம்.

மேற்கு நேபாளத்தில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாறான மூங்கில் பாடசாலை ஒன்றின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சஞ்சேல் பேசுகையில் ''எனது பாடசாலைகளின் மூலம் அனைத்துப் பிள்ளைகளும் நன்மையடைய வேண்டும். கல்விக்கு செலவு செய்ய முடியாத காரணத்துக்காக எந்தப் பிள்ளையும் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கக்கூடாது'' என்று கூறினார்.

தற்போதைய அரசியல் குழப்பநிலைகள் முடிவுக்கு வரும் வேளையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு கல்வி அறிவுள்ள மக்கள் தேவை. அதற்காக மக்களுக்குக் கல்வியறிவூட்டும் கட்டாயம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

2001 ஆம் ஆண்டு சஞ்சேல் தனது முதலாவது மூங்கில் பாடசாலையை நிர்மாணித்தபோது மாவோ கிளர்ச்சியாளர்களுக்கும் ராணுவத்துக்கும் இடையிலான பத்துவருட கால சிவில் யுத்தத்தின்பிடியில் நாடு சிக்கியிருந்தது. இந்த யுத்தத்தில் குறைந்தபட்சம் 13,000 மக்கள் பலியாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், பாடசாலை கல்வி பற்றி சஞ்சேல் முக்கியமான கருத்து ஒன்றைத் தெரிவிக்கையில், பாடசாலைக் கல்வியில் இரண்டு விதம் காணப்படுகின்றது. பொதுப் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு பாடசாலையை விட்டு வெளியேறும்போது ஆங்கிலத்தில் எப்படி எழுதுவது, பேசுவது என்பதுகூடத் தெரியவில்லை. இதேவேளை, தனியார் பாடசாலையில் கல்விகற்கும் தரம் இரண்டைச் சேர்ந்த பிள்ளைகள் தம் பெற்றோர்களுக்கு 'மின்னஞ்சல்' (ஈமெயில்) அனுப்புகின்றனர். இது சமநிலையான ஒரு நடைமுறை அல்ல. இது தவறான ஒரு நடைமுறையாகும். ஏனெனில், இவ்வாறான நிலையால் எதிர்காலத்தில் இரண்டு விதமான பிரஜைகள் உருவாவார்கள். ஆதலால் இந்த நிலையை மாற்றவேண்டும் என்றும் அவர் கூறினார்.

# புராதன காலத்து நகரமும் அரண்மனையும்







துருக்கியின் தெற்கு ஒஸ்மானியா மாகாணத்தில் 1400 வருடகால பழைமை மிக்கது என நம்பப்படும் அரண்மனையும் நகரமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொக்கேலி பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சித்துறையைச் சேர்ந்த ஒரு குழுவினரே கலாசார உல்லாசப் பயணத்துறை அமைச்சின் அனுமதியுடன் இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

இந்த நகரமும் அரண்மனையும் நகர சுவர்களால் சூழப்பட்டுள்ளதாகவும் அங்கு மட்பாண்ட உடைசல்கள் காணப்படுவதாகவும் இவை ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாக இருக்கலாமென்று நம்பப்படுவதாகவும் இந்த ஆய்வுக் குழுவைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் புசுன் துலெக் கூறினார். இந்த புராதன நகரமும் அரண்மனையும் முன்னைய இஸ்லாமிய காலத்தைச் சேர்ந்தவையென தாம் நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# எழில்மிகு 'டால்' ஏரி

இந்திய காஷ்மீரின் எழில்மிகு ஏரி டால்லேக். இந்தியாவின் மிக அழகிய ஏரிகளில் ஒன்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் இரண்டாவது பெரிய ஏரியும் இதுவாகும். உல்லாசப் பயணிகளை பெரிதும் கவரும் இந்த ஏரி மூன்று பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. இதன் கரையில் ஏராளமான தோட்டங்களும் பழ மரங்களும் காணப்படுகின்றன. இங்கு வருகை தருவோர் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பொழுதைப் போக்குவதற்கும் தங்குவதற்கும் ஏற்றவகையிலான இல்லப் படகுகள் (House Boats) நூற்றுக்கணக்கில் இங்கு இருப்பதானது இந்த ஏரியின் தனி சிறப்பாகும்.








சிறுசிறு இல்லங்களாகக் காட்சியளிக்கும் இவை அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இந்த ஏரியில் இன்னொரு சிறப்பம்சம் என்னவெனில், இதில் அமைந்துள்ள இரண்டு மலைக்குன்றுகளும் அவற்றில் உள்ள இரண்டு ஆலயங்களுமாகும். ஏரியைச் சூழவுள்ள மொஹுல் கார்டன்ஸ் (Moghul gardens) தோட்டங்கள் 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளை சேர்ந்தவையாகும்.

அத்துடன், இந்த ஏரியிலுள்ள மனங்கவரும் சில அம்சங்களாவன பறவை இனமும் தாவர வகைகளுமாகும். தாமரை, லில்லி என்பனவும் மற்றும் மிதக்கும் தோட்டங்களும் இங்கு காணப்படுகின்றன. பறவை இனங்களைப் பொறுத்தவரையில் காண்பதற்கு அரிதான மீன்கொத்தி மற்றும் நாரை இனங்களும் காணப்படுகின்றன. இந்த ஏரியை ரசிக்க வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதன் காரணமாக இதனைச் சூழவுள்ள பகுதிகளில் கட்டடங்கள், விடுதிகள், ஹோட்டல்கள் என்பனவும் அதிகரித்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பேசியில் பேசிக்கொண்டே வாகனத்தை செலுத்துதல்;





வாகன ஓட்டுனர்கள் வாகனங்களை செலுத்திக்கொண்டே கைத் தொலைபேசியில் பேசுவது எந்தளவிற்கு ஆபத்தானது, பாதிப்புக்களை ஏற்படுத்தவல்லது என்பது குறித்து அமெரிக்காவின் 'ஊட்டா' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லீ ஸ்ட்ரோர் என்பவர் உட்பட மேலும் சிலர் ஆய்வுகளில் ஈடுபட்டனர். மேற்படி, ஆராய்ச்சிகளில் பல விடயங்கள் தெரியவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

18-49 வயதிற்கு இடைப்பட்ட வாகன ஓட்டுனர்களைக் கண்காணித்த இந்த ஆராய்ச்சிக் குழுவினரால் முக்கியமான ஒரு விடயத்தை அறியமுடிந்துள்ளது. அதாவது, கைத்தொலைபேசியில் உரையாடியவாறு வாகனத்தைத் செலுத்தும் ஓட்டுனர்களில் பலருக்குத் தாம் செல்லவேண்டிய பாதையில் உள்ள கிளை வீதிகளில் வாகனத்தைத் திருப்ப வேண்டிய திசையைக்கூட மறந்துவிடும் சந்தர்ப்பங்களுக்கும் ஆளாகியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இதன்மூலம்

## பல்கலைக்கழக குழுவொன்றின் ஆராய்ச்சி முடிவுகள்...!









மேற்படி பல்கலைக்கழக குழுவினர் தெரிவிக்கின்ற கருத்துக்களின்படி ஒருவகையில் இவர்கள் சுயநினைவை இழந்த நிலையில் வாகனத்தை செலுத்துவோராகவே இனங்காண முடிந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். இவர்கள் கவனயீனமான நிலையில் தவறான வழிமுறைகளிலேயே வாகனத்தை ஓட்டுகின்றனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கைத்தொலைபேசி அறிமுகமாகிய ஆரம்ப நாட்களில் ஒரு கையில் கைப்பேசியை தாங்கியவாறும் மற்றைய ஒரு கையால் வாகனத்தை செலுத்துவதாலுமே விபத்துக்கள் ஏற்படுவதாகவும் கூறப்பட்டு வந்தது. எனினும், தற்போது நவீன 'இயர்ஃபோன்' முறையின்படி கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டு செல்வதால் ஒரு கையில் கைப்பேசியை தாங்கிக்கொண்டு செல்லவேண்டிய தேவை இல்லாததால் ஆபத்து குறைவுதானே என்றும் சிலர் கருதலாம். ஆனால், குறித்த ஆராய்ச்சியாளர்கள் இதனையிட்டும் ஆராய்ந்ததில் என்ன கூறுகின்றனரென்றால், 'கைப்பேசியில் பேசும்போது ஒருவரது கவனம் திசை திருப்பப்படுகின்றது. என்ன விடயத்தைப் பேசுகின்றோமோ அதில்தான் கவனம் சென்றுவிடுகின்றது. இதனால், வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை உணர்ந்து வாகனத்தை ஓட்டுவதற்கான கவனம் சிதறடிக்கப்படுகின்றது. இதுவே ஆபத்தை ஏற்படுத்துகின்றது'' என்றும் குறிப்பிடுகின்றனர்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 02, 2009.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org